கம்யூனிஸ்ட் அறிக்கை

கார்ல்மார்க்ஸ்

கம்யூனிஸ்ட் அறிக்கை

கம்யூனிஸ்ட் அறிக்கை

எழுதியவர்கள்

கார்ல் மார்க்ஸ், பிரேடரிக் ஏங்கல்ஸ்.

மொழிபெயர்ப்பு :-

ரிஸ். இராமசாமி ஐயர்

ரிஸ். கே. கந்தையர்

பதிப்பாளர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கமிட்டி,

ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

[தன் விலை] [சதம் 75

முதற் பதிப்பு: 1948 பெப்ரவரி.

உலகத் தொழிலாளர்களே!
ஒன்று சேருங்கள்!!

Printed at Sri Sanmuganatha Press, Jaffna 20-2-48.
(*Copy Right Reserved*)

பதிப்புரை

"ஐரோப்பாவை ஓர் பூதம் பயமுறுத்துகிறது; அதுதான் கம்யூனிஸம்" என்னும் வாக்கியத்துடன் 1848-ம் வருஷம் பேப்ரவரி மாதத்தில் கார்ல் மார்க்ஸும் பிரெடரிக் எங்கல்ஸும் தங்கள் கம்யூனிஸ்ட் அறிக்கையை ஆரம்பித்தார்கள்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் நூறுவது ஆண்டாகிய 1948-ல் உலகம் முழுவதையும் இப் பூதம் பயமுறுத்துகிறதென அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களைப் பின் பற்றும் ஒவ்வோர் தேசத்துப் பிற்போக்குக் கும்பலும் ஓயாது உளறுகின்றனர்.

கம்யூனிஸம் ஓர் பூதமெனக்கூறி ஐரோப்பிய தேசங்களிலுள்ள பெரும்பான்மையோரான பாமர மக்களை ஐரோப்பிய பிற்போக்காளர் அக்காலத்தில் ஏமாற்ற முயற்சித்தனர்.

இவ் வேமாற்றலைத் தகர்க்கவே கம்யூனிஸ்ட் அறிக்கை பிரகடனமாக்கப்பட்டது. இன்று ஒவ்வோர் தேசத்திலும் கம்யூனிஸ்ட் இயக்கம் வேரூன்றி வளர்கின்றது. சோவியத் நாட்டில் மார்க்ஸ், எங்கல்ஸ் கோட்பாடுகள் கடைமுறையில் வந்து முப்பது வருஷங்களாகின்றன.

எனினும் கம்யூனிஸத்தைப்பற்றிய துர்ப்பிரசாரத்தை எதிர்க்கவேண்டியிருக்கிறது. கீழைத்தேசங்களின் இயல்புக்கு கம்யூனிஸம் மாறானது; மேலைத்தேச ஜனநாயக முறைக்கும், அது மாறானதெனக் கூறப்படும் பொய்களை அழிக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் அறிக்கை உலகசரித்திரப் போக்கை துருவி ஆராய்ந்தெழுதப்பட்டது. அதிலுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றும் விரிவாக வளர்க்கூடியன. இவ்வறிக்கையி

லிருக்கும் ஒவ்வொரு வசனமும் சிந்தனைக்கினியாக வளர வேண்டியது; அப்படி வளர்ந்து உலக சரித்திரத்தின் பல அம்சங்களையும் இக் சுருத்துக்கள் தெட்டத்தெளிவாக விளக்கக்கூடியன.

எனவே, தமிழன்பர் மொழிபெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையை வசனம் வசனமாக, ஆராய்ந்து படிக்கவேண்டும்; அப்போது கம்யூனிஸம் உலக இயல்பின் போக்கில் தவிர்க்கமுடியாது வளர்வது, ஒவ்வோர் தேசத்துக்கும் ஏற்றது என்பது விளங்கும். கம்யூனிஸம் ருஷ்யச்சரக்கல்ல; அது ஓர் உலகதத்வம் என்பதை தமிழன்பர் உணரவேண்டும் என்ற ஆவலினால் இம் மொழிபெயர்ப்பை அறிக்கையின் நூறுவது ஆண்டில் பிரசுரிக்கிறோம்.

யாழ்ப்பாணம்.
18-2-48.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
யாழ்ப்பாணக் கமிட்டி.



கம்யூனிஸ்ட் அறிக்கை.

ஐரோப்பாவை ஒரு பூதம் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது - அதுதான் கம்யூனிஸம். இப்பூதத்தை ஐரோப்பாவிலிருந்து துரத்தியடிப்பதற்காக, ஐரோப்பாவிலுள்ள சகல பூர்வீக (பிற்போக்கான) சக்திகளெல்லாம் - மதஸ்தாபனத்தின் தலைவனைய போப், ருஷ்ய சக்கிரவர்த்தியாகிய ஜார், ஆஸ்டிரிய பிரதம மந்திரி மெட்டோனிச், பிரெஞ்ச் அதிகாரி குய்சோ, பிரெஞ்ச் ரடிக்கல்ஸ் (Radicals) ஜெர்மன் பொலீஸ் ஒற்றர்கள், இவர்களெல்லாம் - ஒரு 'பரிசுத்தமான' ஒப்பந்தத்திற் பிரவேசித்திருக்கிறார்கள்.

அதிகாரத்திலிருக்கும் கட்சியால் 'கம்யூனிஸ்ட்' என்று குற்றம் சுமத்தப்படாத ஒரு அரசியல் எதிர்க்கட்சி எங்கேயாவது உண்டா? பிற்போக்கான கட்சியாயிருந்தாலும்சரி, முற்போக்கான கட்சியாயிருந்தாலும்சரி, அந்தக் கட்சிக்கு எதிராகும்போது 'கம்யூனிஸ்ட்' என்னும் அபாண்டமான பழியைச் சுமத்தாத எதிர்க்கட்சி ஒன்று உண்டா?

இதிலிருந்து இரு உண்மைகள் பிறக்கின்றன. (1) கம்யூனிஸம் என்பதும் ஒரு தனித்த சக்தியென்பதை எல்லா ஐரோப்பிய சக்திகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. (2) கம்யூனிஸ்டுகள் சகல உலகத்திற்கும் பகிரங்கமாகத் தங்கள் கொள்கைகளையும், நோக்கங்களையும், திட்டங்களையும் ஒரு பிரகடனம் மூலம் வெளிப்படுத்தி, கம்யூனிஸ்ட் பூதமென்னும் சிறுபிள்ளைப் பூச்சாண்டிக் கதையை அம்பலப்படுத்தக் காலம் வந்துவிட்டது.

இதற்காகவே, பல தேசிய இனக்களைச் சேர்ந்த கம்யூனிஸ்ட்களும் லண்டனில் கூடி இங்கிலிஷ், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி, பிளெமிஷ், டானிஷ் பாஷைகளில் பிரசுரிப்பதற்காகக் கீழ்க்காணும் அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள்.

I
பூர்ஷ்வாக்களும் புரோலிட்டேரியட்டுகளும்[1]

மனித சமுதாயத்தின் சரித்திரமானது வர்க்கப் போராட்டத்தின் சரித்திரமாகவே இருந்து வந்திருக்கிறது.

அடிமைத் தளைகளை இழந்தவன், அடிமை; பட்ரிஷன், பிலிபியன் (Patrician, Plebian); நிலப்பிரபு, பண்ணை அடிமை; கில்ட்மாஸ்டர், ஜேனிமன்[3] (Guild-master, Journeyman);- சுருக்கக்கூறின் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் - என்னும் இருவர்க்கத்தாரும் ஒருவ

---

1 பூர்ஷுவா: (Bourgeoisie) சமூகத்திற்கு வேண்டிய வற்றை உற்பத்திசெய்யும் சாதனங்களைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு கூலிக்கு உழைப்பைவிலைக்குவாங்கும் நவீனகால முத லாளி.

புரோலிட்டேரியட்: (Proletariat) கூலிக்கு வேலைசெய்யும் நவீனகாலத் தொழிலாளர்கள்; இவர்களுக்கு தங்களுக்கென சொந் தமாக உற்பத்திச் சாதனங்கள் எதுவும் கிடையாது; இதனால் உயிர் வாழ்வதற்காகத் தங்களுடைய உழைப்பு சக்தியை விற்கும்படியான நிலைமைக்குத் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

2 பட்ரிஷன்: (Patrician) பூர்வீக ரோமாபுரியிலுள்ள ஆளும்வகுப்பு; இவர்களே பெரும்பான்மையான நிலச் சொத்தக் காரர்களாகவு மிருந்தனர். பெலிபியன்: (Plebian) பூர்வீக ரோமா புரியில் சுதந்தரவர்க்கத்தைச் (அடிமை யல்லாத வர்க்கத்தை) சேர்ந் தவர்களாயிருந்த போதிலும் பிரஜா உரிமைகள் எல்லாம் பெறாத வர்கள்.

3 கில்ட்மாஸ்டர், ஜேனிமன்: (Guildmaster, Journey man) 14-ம் 15-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஒரே பட்டணத் தில் ஒரே தொழிலில் ஈடுபட்டோர் ஒரு சங்கமாகச் சேர்ந்து ஒரு தலைவனின் கீழ்வேலை செய்யும் முறையினால் ஏற்பட்ட தொழிற் தலைவனும், தொழிலாளியும்.

ரையொருவர்எதிர்த்து எப்பொழுதும் போராடிக்கொண்டு வந்திருக்கின்றனர். இப்போராட்டம் சிலசமயங்களில் பகிரங்கமாகவும், சிலசமயங்களில் மறைமுகமாகவும் தொடர்ந்துகடந்துகொண்டு வந்தது. இப்போராட்டம் ஒவ்வொரு முறையும் புரட்சிகரமான வழியில் சமூகத்தைத் திருத்தியமைத்தது, அல்லது இருவர்க்கத்தாருடைய அழிவையும் தேடிமுடிந்தது.

சரித்திரகால முற்பகுதியில், எல்லாவிடத்திலும் சமூகம் பல சிக்கலான முறையில் பல படிப்படியான, எற்றம் தாழ்வான, முறையில் பிரிக்கப்பட்டிருந்தன. புராதன ரோமாபுரியில், பிரபுக்கள் னேட்டுகள்[4] (Knights) பிலிபியன், அடிமை என்றும், மத்திபகால ஐரோப்பாவில் ஜமீன்தார், கீழ்க்குத்தகைக்காறன், கில்ட்மாஸ்டர் ஜேனிமன், கைத்தொழில் கற்போர், பண்ணை அடிமைகள் என்றும் சமுதாயம் பிரிக்கப்பட்டது. இப்பிரிவுகளுக்குள் அனேக உட்பிரிவுகளும் இருந்தன.

நிலப்பிரபுத்வசமூகத்தை அழித்துத் தேய்த்து உற்பத்தியான பூர்ஷுவா சமூகமானது வர்க்க விரோதத்திற்கு விடை கொடுக்கவில்லை. அது புதியவர்க்கங்களையும், புதிய சூரண்டல்களுக்கேற்ற நிலையையும், வர்க்கப் போராட்டத்தில் பழையமுறைகளுக்குப்பதிலாக புதிய முறைகளையுமே சிருஷ்டித்தது.

எங்கள் சகாப்தம் - அதாவது பூர்ஷுவாக்களுடைய சகாப்தம் - மற்றைய எல்லா சகாப்தங்களைபும்விட ஒரு விசேஷ அம்சத்தைப் பெற்றிருக்கிறது: வர்க்க விரோதத்தின் சிக்கலகள் குறைந்ததே இவ்வம்சம். சமூகம் முழுவதும் ஒன்றை ஒன்று எதிர்க்கும் இரு பெரும் வர்க்

---

[4] னேட்டுகள்: (Knights) புராதன ரோமாபுரியில் லெவாதேலி செய்பவரும் பெரிய வியாபாரிகளும் னேட்டுகள் என்றழைக்கப்பட்டனர்.

கங்களாக பிளவுபட்டுக் கொண்டேபோகிறது. இவ் விரு வர்க்கங்களாவன பூர்ஷ்வா, புரோலிட்டேரியட் வர்க் கங்களே.

மத்தியகால பட்டணங்களில் பண்ணை அடிமைகளி லிருந்து சலுகைகள் பெற்ற பேகர்கள்[5] (Burgesses) அவ தரித்தனர். இப்படி அவதரித்த பேகர்களிலிருந்து பூர்ஷ்வா வாக்களுடைய முதல் நபர்கள் உருவாயினர்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்தமை, ஆபிரிக்காவைச் சுற்றி இந்தியாவிற்கு ஒரு கடற்பாதை கண்டுபிடித்தமை பூர்ஷ்வா வளர்ச்சியுறுவதற்கு புதுச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தின. கிழக்கிந்திய, இந்திய, சீன மார்க்கட்டுகள் அமெரிக்காவில் குடியேற்றம், குடியேற்றநாடுகளுடன் ஏற் பட்ட வியாபாரம், காணயமாற்றில் ஏறபட்ட அபிவிர்த்தி பண்டமாற்றில் பொதுவாக ஏற்பட்ட அபிவிர்த்தி ஆகிய வைகள், வியாபாரத்திற்கும், கப்பல் போக்குவரத்திற்கும், தொழில் அபிவிர்த்திக்கும், முன் ஒருபோதும் கேள்விப் படாத அளவில் ஒரு முன்னேற்ற சக்தியைக் கொடுத்தது. இதனால் கிடுகிடன ஆடிக்கொண்டிருக்கும் நிலப்பிரபுத்வ சமூகத்திலிருந்த புரட்சிகரமான சக்திகள் வேகமாக வளர்ச்சியுற்றன.

நிலப்பிரபுத்வ காலத்திலுள்ள கைத்தொழில் முறை யில் பொருள் உற்பத்திகளெல்லாம், கில்ட்களின் ஏக போக உரிமையாகவிருந்தது. இவ்உற்பத்தி முறையால் புதிய மார்க்கட்டுகளின் வளருகின்ற தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. ஆகவே தொழிற்சாலை முறை ஏற்பட்டது. கில்ட்மாஸ்டர்கள், தொழிற்சாலை உற்பத் தியில் ஈடுபட்ட மத்திய வகுப்பாரால் ஓதுக்கப்பட்ட னர். தம்தம் தொழிலிற்கேற்ற சங்கங்கள்மூலம் ஸ்தாபிக் கப்பட்ட தொழிலாளர் பிரிவினை போய், தொழிற்சாலை

[5] பேகர்கள்: (Burgesses) பட்டணத்திலுள்ள வியாபாரி கள் கைத்தொழில் செய்வோர் முதலியவர்கள்.

வாரியாகப் பிரிக்கப்பட்ட தொழிற்பிரிவினை ஏற்பட்டது.

அதேசமயத்தில் மார்க்கட்டுகள் வளர்ந்துகொண்டே போயின. தேவைகளும் அதிகரித்தன. இங்கிலேயில் கைத் தொழிலால் ஏற்பட்ட உற்பத்தி போதாததாயிருந்தது. அப்பொழுது நீராவியும், யந்திரசாதனமும் தொழில் உற் பத்திமுறைகளில் பெரும் புரட்சியை ஏற்படுத்தின. (தற் கால ராஷ்ட்ர யந்திரத் தொழிற்சாலைகள் சிறிய கைத் தொழிற்சாலைகளுடைய இடத்தைக் கைப்பற்றின. கைத் தொழிலில் ஈடுபட்ட மத்திய வகுப்பாருடைய இடத்தை லக்ஷாதிபதிகளான யந்திரசாதன முதலாளிகள் எடுத் தனர். இவ் லக்ஷாதிபதிகள் கைத்தொழிலில் ஈடுபட்ட பிர்மாண்டமான தொழிலாளர் கூட்டங்களின் தலைவர் களாக வந்து தற்கால பூர்ஷ்வாக்களாயினர்.

தற்கால யந்திரசாதன உற்பத்தி உலக மார்க்கட்டை ஒன்றுக ஓரேமார்க்கட்டாக ஸ்தாபித்துவிட்டது. இதற்கு அமெரிக்காவைக் கண்டுபிடித்தமை அடிப்படைக் காரண மாயிருந்தது. இவ்வுலக மார்க்கட் வியாபாரத்திற்கும் தரையிலும் கடலிலும் உள்ள போக்குவரத்து சாதனங் கட்கும் பெரிய அபிவிர்த்தியைக் கொடுத்தது. இவ்வபி விர்த்தி யந்திரசாதனத் தொழில் முறையின் வளர்ச்சி யைப் பாதித்திருக்கிறது யந்திரசாதன உற்பத்தி, வியா பாரம், கப்பல் போக்குவரத்து, ரயில்வேக்கள், ஆகிய வைகள் பெருகிய விதத்தில் பூர்ஷ்வாக்களும் அபி விர்த்தி யடைந்தனர். தங்கள் மூலதனத்தைப் பெருக் கினர். மேலும், மத்திமகாலம் தொட்டு உண்டாயிருந்த பல்வேறு மத்திய வகுப்பினரையும் சமூக நிலையில்கீழ்ப் படுத்தினர்.

ஆகவே பொருள் உற்பத்திமுறையிலும் பண்ட மாற்று முறையிலும் நடந்த பல புரட்சிகளின் விளைவாய் ஏற்பட்ட நீண்டகால வளர்ச்சியினல், தற்கால பூர்ஷ் வாக்கள் உருவெடுத்தனர் என்பதை நாம் காண்கிறோம்.

பூர்ஷுவாக்களுடைய வளர்ச்சியின் ஒவ்வொரு படிக்கும் ஏற்ப அவ்வகுப்பாருடைய அரசியல் முன்னேற்றம் ஏற்பட்டது. இவ்வகுப்பார் நிலப்பிரபுதவ காலத்தில் சூழ்ண்டப்படும் வகுப்பாயும் மத்தியகால 'கம்யூனில்'[6] (Commune) ஆயுதந்தரித்த சுய ஆட்சி செய்யும் சங்கமாகவுமிருந்தார்கள். இத்தாலி, ஜெர்மனி போன்ற இடங்களில் சுயாட்சியுள்ள குடியரசுப் பட்டணங்களாகவும், பிரான்ஸ் போன்ற இடங்களில் அரசனுக்கு வரி செலுத்தும் மூன்றாவது எஸ்டேட்[7] ஆகவும் இருந்தார்கள். பின்பு கைத்தொழில் காலத்தில் பிரபு வர்க்கத்தை எதிர்ப்பதற்காக, நிலப்பிரபுத்துவ அல்லது எதேச்சாதிகார மன்னர்களுக்கு சேவைசெய்தும், உண்மையில் பெரிய முடியாட்சிகளின் மூலக் கற்களாக அமைந்தனர். இப் பூர்ஷுவாக்கள், நவீன யந்திரசாதன ஸ்தாபனத்துடனும், உலகமார்க்கட்டின் ஸ்தாபனத்துடனும், தற்கால ஜெனப் பிரதித்துவ அரசாங்கத்தில் அரசியல் அதிகாரங்கள் முழுவதையும் தங்களுக்கெனக் கைப்பற்றிக்கொண்டனர். எனவே, தற்கால அரசாங்கம் சகல பூர்ஷுவாக்களுடைய பொது விவகாரங்களைத் திறமையாக நிர்வகிக்கும் ஓர் சபையே,

சரித்திர பூர்வமாக நோக்குமிடத்து பூர்ஷுவாவர்க்கம் மிகவும் புரட்சிகரமான செய்கையைச் செய்திருக்கின்றது.

---

6. கம்யூன்: (Commune) பிரஞ்ச் தேசத்தில்உள்ள பட்டணங்கள் ஜமீன்தார்களிடமிருந்து உரிமைகளைப் பெறமுன்பே தங்களுக்குச் சூட்டிக்கொண்ட பெயர்.

7. மூன்றாவது எஸ்டேட்: மூன்று எஸ்டேட்டுகளாவன முதலாவது டீதஸ்ரபனங்கள், இரண்டாவது நிலப்பிரபுக்கள், மூன்றாவது பூர்ஷுவாக்கள்.

எங்கெங்கு பூர்ஷ்வா வகுப்பின்கை வளர்த்ததோ அங்கெல்லாம் நிப்பிரபுத்துவ, பற்றிரியாக்கல், (குடும்பத் தலைவன் குடும்பத்தில் எதேச்சாதிகார ஆட்சி நடத்தல்) ஐடிலிக், (கற்பனைஉலகில் உள்ள) தொடர்புகளுக்கு மூற்றுப்புள்ளி வைத்தது. தனக்கு இயற்கையாகஅமைந்த மேல்வர்க்கத்தாருடன் மனிதன் பிணைக்கப்பட்டிருந்த பல நிலப்பிரபுத்துவத் தன்மையான சகல பந்தங்களையெல் லாம் ஈவிரக்கமின்றித் தகர்த்தெறிந்து, மனிதனும், மனித னும், வெறும் சுயநலத்தால் - ஈவிரக்கமில்லா ரொக்கம் கொடுத்தலால் - ஏற்படக்கூடிய ஒரே ஒரு தொடர்பை மாத்திரமே வைத்திருக்கும்படி இவ்வகுப்பு செய்தது. தன்னையே உயர்த்தும் நோக்கத்தைக்கொண்ட உணர்ச்சி யற்றவாழ்க்கை முறையில், தெய்வீகப் பரவசத்தால், கூஹத்திரீயதார்மீக உற்சாகத்தால், மனவிருப்பையே அடிப் படையாகக்கொண்ட வெறும் உணர்ச்சியால், ஏற்படும் குதூகல ஆவேசங்கள் எல்லாவற்றையும் இவ்வகுப்பு அமிழ்த்திவிட்டது. மனிதனுடைய மதிப்பை நாணயமாற் றுப்போல் மாற்றக்கூடிய ஒருவிலையாக மாற்றிவிட்டது. அழிக்கமுடியாத அனேக சாதனரீதியான சுதந்தரங்க ளுக்குப் பதிலாகத் தங்கு தடையற்ற வியாபாரம் என் னும் ஒரே சுதந்தரத்தை, - சுரண்டுக்கூறின் சமய அரசியல் பிரேமைகளால் போர்வையிடப்பட்ட சுரண்டலுக்குப் பதிலாக, ஒழிவு மறைவு இல்லாத, நேரடியான, வெட்கக் கேடான, மிருகத்தனமான, சுரண்டலை - ஏற்படுத்தியது.

இதுகாறும் பயபக்தியுடனும் வணக்கத்துடனும் உலகத்தில் மதிக்கப்பட்ட தொழில்களெல்லாவற்றிலிருந் தும் கீர்த்திப் பிளம்பை பூர்ஷ்வா வகுப்பு எடுத்துவிட் டது. வைத்தியன், வக்கீல், மதகுரு, கவி, விஞ்ஞானி ஆகிய எல்லோரையும் தன்னுடைய கூலிவேலைக்காராராக இவ் வகுப்பு ஆக்கிவிட்டது.

மேலும் பூர்ஷுவா வகுப்பு குடும்பத்திலிருந்த உணர்ச்சிப் போர்வையைக் கிழித்தெறிந்து, குடும்ப சம்பந்தத்தை கேவலம் பணம் சம்பந்தமான நிலைக்குத் தாழ்த்திவிட்டது.

மத்தியகாலத்தில், வேடிக்கைக்காக, மிருகத்தனமாகக் காட்டப்பட்ட தைரியத்திறமை - பிற்போக்குவாதிகளால் புகழப்பட்டபோதிலும் - எவ்விதம் மிகவும் கேவலமான சோம்பலுடன் இயற்கையாக இணைந்ததென்பதை பூர்ஷுவாவகுப்புக்காட்டியது. முதல்முதலாக இவ்வகுப்பே மனித சக்தியால் என்னென்ன செய்யமுடியுமென்பதைக் காட்டியது. எகிப்திய கூர்நுதிக் கோபுரங்கள், ரோமாபுரியிலுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்கள், கொதிக் தேவாலயங்கள், முதலிய அற்புதங்களைக் காட்டிலும் மிகப்பெரிய அற்புதங்களை இவ்வகுப்பு செய்திருக்கிறது. முற்காலத்தில் நடந்த தேசிய இனங்களின் பிரயாணங்களையும் 'சிலுவை'யுத்தங்களையும் மிகச்சிறு செய்கைகளாக்கும் பெரியபடையெடுப்புக்களை நடத்தியிருக்கிறது.

உற்பத்தி சாதனங்களை அடிக்கடி புரட்சிகரமாக மாற்றுமல் பூர்ஷுவாவர்க்கம் நிலைக்கமுடியாது. அதோடு உற்பத்தி தொடர்புகளையும், அவற்றோடு மனித சமூகத்தின் தொடர்புகளையும் மாற்றுமல் இருக்க அவ்வர்க்கத்தால் முடியாது. இதற்குமாறுக முன்பு கைத்தொழிலில்ஈடுபட்டவர்க்கங்கள் தாம்நிலைப்பதற்கு அக்காலத்துப் பழைய உற்பத்திமுறைகளை மாற்றுமல் பாதுகாக்கவேண்டி இருந்தது. உற்பத்தியில் புரட்சிகரமானமாற்றமும், சமூகநிலையில் தொடர்ச்சியான குழப்பமும் எப்பொழுதுமுள்ள நிலையற்ற சன்மையும், நிழர்ச்சியும்தான் பூர்ஷுவா சகாப்தத்தை முன்வந்த சகாப்தங்களிலிருந்து பிரித்து அதற்குத்

ரனித்தன்மையைக் கொடுக்கின்றது. நீடுபேற்ற பழைய சம்பந்தங்களும் அனைகளுடன் தொடர்ந்துவரும் பழைய மதிக்கப்பட்ட அபிப்பிராயங்களும், கருத்துக்களும் தகர்க்கப் படுகின்றன. புதிதாய் எழும் தொடர்புகளும், கருத்துக்களும் சமூகத்தில் நீடுபேறுமுன் பழையனவாய் விடுகின்றன. ஸ்திரமென்று கருதப்பட்டவைகளெல்லாம் அழிகின்றன. பரிசுத்தமானவைகளெல்லாம் அசுசுப்படுகின்றன. இறுதியில் மனிதன் தன் தெளிவான புத்தியுடன் தன்னுடைய வாழ்வின் உண்மையான நிலையையும் மற்றைய மனிதருடன் தனக்கு ஏற்பட்டிருக்கும் தொடர்புகளையும் உணரும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறான்.

பூர்ஷுவாக்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு வேண்டிய புதுப்புது மார்க்கெட்டுகளே எப்பொழுதும் விருத்திசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களை பூமிமுழுவதும் துரத்துகிறது. அவ்வர்க்கம் பூமிமுழுவதும் வசிக்கவும் குடியேறவும் வேண்டியிருக்கிறது. மேலும் அவ்வர்க்கம் எல்லா இடங்களிலும் தொடர்பு வைத்திருக்க வேண்டியிருக்கிறது.

உலக மார்க்கெட் சுழுவதையும் பூர்ஷுவா வர்க்கம் சுரண்டுவதின்மூலம் ஒவ்வொருதேசங்களின் உழுள்ள பொருளுற்பத்திக்கும், பொருள்களின் உபயோகத்துக்கும் சர்வதேசீயத் தன்மையைக் கொடுத்திருக்கிறது. பிற்போக்காளரின் மனம் கொதிக்குப்படி, முன்பு தேசிய அடிப்படையில் வளர்ந்த தொழில்முலாயின் அஸ்திவாரத்தை இவ்வர்க்கம் தகர்த்தவிட்டது. முன் ஸ்தாபிக்கப்பட்ட தேசீயக் கைத்தொழில்கள் எல்லாம் அழிக்கப்பட்டோ அல்லது நாளுக்குநாள் அழிந்துகொண்டோ போகின்றன. இத்தேசீயக் கைத்தொழில்கள் புதிய யந்திரசாதன முறைகளை உபயோகிக்கும் தொழிற் சாலைகளால் தங்கள் ஸ்தானத்திலிருந்து நீக்கப்படுகின்றன. இவ் யந்திரசாதன முறை

கள் இரு சந்தைகள் எய்ந்தன; அவையாவன: சொந்தநாட்டு மூலப்பொருள்களை மாத்திரம் உபயோகிக்காமல் மிகத் தூரதேசத்தி லுள்ள மூலப்பொருள்களை உபயோகிப்பதும், யந்திர சாதனத்தால் உற்பத்தியாகும் பொருள்களை சுயதேசத்தில் மாத்திரம் அல்லாமல் வெளி நாடுகளி லும் செலவழிதலு மாம். இவ்யந்திரசாதன முறையை ஸ்தாபித்தல் எல்லாச் சீர்திருத்தின நாட்டினதும் ஜீவாதாரப் பிரச்னையாகிறது. அவ்வதேசத்தில் உற்பத்தியான பொருள்களைக் கொண்டு அவ்வத் தேசங்கள் தங்கள் முந்திய தேவையைப் பூர்த்தி செய்துகொண்ட முறைக்குப் பதிலாக, சகல தேசங்களினதும் சகல சுவாத்தியத்தினதும் உற்பத்திப் பொருள்கள் மனிதரின் புதிய தேவைகளைப் பூர்த்திசெய்ய அவசியமாகின்றன. அவ்வவ்விடத்திற்கும் தேசீய இனத்திற்குமுரிய ஏகாந்தவாசத்திற்கும், சுயசம்பூரணத்துக்கும் பதிலாக எல்லாத்திக்கிலும் தொடர்புஏற்படுத்திக்கொண்டு சர்வதேசங்களும் ஒன்றின்மேல் ஒன்று சார்ந்திருக்கும் நிலையை அடைகின்றன. பொருள் உற்பத்தியில் மாத்திரமல்லாமல் அறிவுவளர்ச்சியிலும் இத்தனமை செறிந்திருக்கிறது. தனிப்பட்ட தேசங்களின் அறிவுவளர்ச்சியின் சிருஷ்டிகள் எல்லாத் தேசங்களுக்கும் பொதுச் சொத்தாகின்றன. குறுகிய தேசீய மனப்பான்மையும், பட்சபாதமான தேசீய உணர்ச்சியும், உலகிலிருக்கமுடியாததாகி ஏற்படுகிறது. சகல தேசீய பிராந்தீய இலக்கியங்களிலிருந்து ஒரு உலக இலக்கியம் வளர்கின்றது.

உற்பத்திசாதனங்களை மிகவேகமாகத் திருத்தியமைத்தலாலும், போக்குவரத்தை மிகவும் இலகுவாக்கும் முறைகளாலும் உலகிலுள்ள மக்களுள் நாகரீகத்தின் கடைசிப் படியில உள்ள தேசீய இனங்களையுங்கூட பூர்ஷுவாவர்க்கம் நாகரீகத்திற்குள் இழுக்கின்றது. இவ்வகுப்பின் வியாபாரப் பொருட்களின் குறைந்தவிலைகள், தகர்க்கமுடியாத சகலதடைகளையும் தகர்க்கும் பெரும் பீரங்கிகளாகின்றன.

அதோடு விதேசிகளை எதிர்க்கும் அநாகரீக மக்களிடையே யுள்ள பிடிவாதமான வெறுப்பையும் அகற்றி அம் மக்களைச் சரணடையச் செய்கிறது. தாக்கள் அழியாதவாறு தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு சகல தேசங்களும் பூர்ஷுவா பொருள் உற்பத்திமுறையைக் கைக்கொள்ளும்படி இவ்வர்க்கம் கிர்ப்பந்திக்கிறது: அதாவது அவர்கள் எல்லாரையும் பூர்ஷுவாத்தன்மை யுள்ளவர்களாக மாற்றுகிறது. சுருங்கக்கூறின், பூர்ஷுவா வர்க்கம் தன்னுடைய பிரதிபிம்பமாகவே உலகத்தை அமைக்கின்றது.

பூர்ஷுவா வர்க்கம் கிராமங்களை நகரத்திற்கு அடிமையாக்கியது. பிரமாண்டமான நகரங்களைச் சிருஷ்டித்தது. நகர ஜனத்தொகையை கிராம ஜனத்தொகையிலும் பன்மடங்கு அதிகமாக்கியது. இவ்வாறு அனேக ஜனங்களை கிராமாந்திர விவேக சூன்யத்திலிருந்து காப்பாற்றியது. கிராம வாழ்க்கையை எப்படி நகர வாழ்க்கையில் தொங்கும்படி செய்ததோ அப்படியே நாகரீகமற்ற, அரை நாகரீமுள்ள தேசங்களை, நாகரீகமுள்ள தேசங்களில் தங்கும்படி செய்தது. அதுபோல விவசாயிகள் நாடுகளை பூர்ஷுவா நாடுகளிலும், கீழைத்தேசங்களை மேலைத்தேசங்களிலும் தொங்கும்படி செய்தது.

ஜனங்களினதும், உற்பத்திச் சாதனகளினதும், சொத்துக்களினதும் பரந்திருக்குபதன்மையை நாளாந்தம், இவ்வர்க்கம் மாற்றிக்கொண்டு வருகிறது. ஜனங்களை ஓரிடத்தில் திரட்டி வருகிறது. அதுபோல உற்பத்திச் சாதனங்களையும் சொத்துக்களையும் ஒரு சிலருடைய கைகளில் குவித்து வருகிறது. இவற்றால் இன்றியமையாத ஏற்பட்ட பலன், அரசியல் முறையிலும் ஓர் மத்திய அதிகாரத்தை ஏற்படுத்தியதே. பல்வேறு அதிகாரிகள், சட்டங்கள், அரசாங்கங்கள், வரிமுறைகள் ஆகியவற்றுடன், சுதந்திரமாகவோ அல்லது பெயரளவில் ஒன்றுபட்டோ

விருந்த பல மாகாணங்கள் ஒன்முகப் பிணைக்கப்பட்டு ஒரே அரசாங்கம், ஒரே சட்டமுறை, ஒரே தேசிய வர்க்க நலம், ஒரே அரசாங்கவல்லை, ஒரே சுங்கவரி ஆகியவற்றை யுள்ள ஒரே தேசமாயின.

முந்திய தலைமுறைகளெல்லாம் சேர்ந்து சிருஷ்டித்த உற்பத்தி சக்திகளிலும்பார்க்க அதி பிரமாண்டமான உற்பத்தி சக்திகளை பூர்ஷுவாவர்க்கம் நூறு ஆண்டுகளுக் குட்பட்ட தனது ஆட்சி காலத்தில் சிருஷ்டித்திருக்கிறது. இயற்கையின் சக்திகளை மனிதனுக்கு அடிமைப்படுத்தல், யந்திரசாதனங்களை உபயோகித்தல், ரசாயனத்தை விவ சாயத்திற்கும் கைத்தொழிலிற்கும் உபயோகப்படுத்தல், நீராவியின்மூலம் கடலில் போக்குவரத்துச்செய்தல், ரயில் வேய்க்கள், எலக்டிரிக் தந்திகள், முழுக்கண்டங்களிலும் விவசாயத்திற்காகக் காடுவெட்டல், ஆறுகளை வாய்க்கால் கள்மூலம் திருப்புதல், ஜனமில்லாவிடத்தில் பெருந்தொகை ஜனத்திரள்களைச் சிருஷ்டித்தல் ஆகியவற்றை பூர்ஷுவா வர்க்கம் செய்திருக்கிறது. இத்தகைய உற்பத்தி சக்திக ளெல்லாம் சமுதாயத்தின் தொழிற் சக்திக்குள் அடங்கி மறைமுகமாக விருக்கின்றன வென்று முந்திய நூற்முண் டுகளில் யாராவது கனவுகண்டதுண்டா?

ஆகவே பூர்ஷுவாவருப்புதான் வளர்வதற்கு அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி பண்டமாற்றுச் சாதனங்கள் நிலப்பிரபுத்வ சமுதாயத்தினுள்ளேயே உரு வெடுத்தனவென்பதை நாங்கள் முற்கூறியவற்றிலிருந்து அறிகிறோம்; பொருளுற்பத்தியினதும், பண்டமாற்றின தும் அபிவிருத்தியின் ஒரு கட்டத்தில், நிலப்பிரபுத்வமுறை கையாண்ட பொருள்உற்பத்தி பண்டமாற்று முறைகளும் ஜமீன்தாரிமுறையின்படி அமைக்கப்பட்ட கைத்தொழில் விவசாயமுறைகளும்,—சுருங்கக்கூறின் நிலப்பிரபுத்வ முறை யிலுள்ள சொத்துரிமைத் தொடர்புகள் - ஏற்கனவே

வளர்ச்சியுற்ற உற்பத்தி சக்திகளுடன் முரண்பட்டன. இத்தொடர்புகள் இவ் வுற்பத்திசக்திகளின் விலங்குகளா யின. ஆகவே அவ் விலங்குகள் அறுத்தெறியப்பட வேண் டியிருந்தது; அறுத்தும் எறியப்பட்டன.

நிலப்பிரபுத்வ முறையில் தங்குதடையற்ற போட்டி நுழைந்தது. அதனுடனகூடவே அப்போட்டிக்குரிய அரசியல் சமுதாயஅமைப்பும் ஏற்பட்டது; மேலும் அத்துடன் பூர்ஷுவாவர்க்கத்தின் அரசியல் பொருளாதார ஆதிக்கம் ஏற்பட்டது.

இதுபோன்ற வளர்ச்சியொன்று எங்கள் கண்முன் னும் நடந்துகொண்டிருக்கின்றது. தற்கால பூர்ஷுவா சமூ சம் தனக்கெனப் பிரத்தியேகமாக ஏற்படுத்திய உற்பத்தி சாதனஙிகியோக, சொத்துரிமைத் தொடர்புகளுடன் பிர மாண்டமான உற்பத்திஙிகியோக சாதனங்களை வளர்த்திரு க்கிறது. தனது மந்திரத்தைக்கொண்டு பாதாளலோகத்திலி ருந்து அழைத்தபிசாசுகளைக் கட்டுப்படுத்தமுடியாது நின்று தத்தளிக்கும் மாந்திரீகனைப்போல் இச்சமுதாயம் இப்போ யிருக்கிறது. கடந்த அநேக வருடங்களாக ஏற்பட்ட யந் திரசாதனத்தினதும், வியாபாரத்தினதும் சரித்திரம், பூர்ஷு வாவர்க்கத்தின் ஆட்சியும் வாழ்க்கையும் நிலைப்பதற்குச் சாதகமான உற்பத்தியின் தற்கால சூழ்நிலைபுடனும், சொத் துரிமைமுறைகளுடனும் தற்கால உற்பத்திசக்திகள் நடத் திவரும் போராட்டத்தின் சரித்திரமேயாகும். இவ்விடத் தில் காலத்திற்குக் காலம் ஏற்படும் வியாபார நெருக்கடிகளை மாத்திரம் குறித்தால் போதுமான தது. இந் நெருக்கடிகள முழு பூர்ஷுவா சமுதாயத்தின் வாழ்க்கையையும் காலத்திற்குக் காலம் பயங்கரமான சோதனைக் குட்படுத்துகிறது. இந்நெருக்கடிகளில், உற் பத்தியான பொருள்களில் பெரும்பகுதி மாத்திரமல்லாமல் முந்தி சிருஷ்டிக்கப்பட்ட உற்பத்தி சக்திகளில் ஒரு பெரும் பகுதியும் அழிக்கப்படுகின்றன. இந்நெருக்கடிகளில், முற்

காலத்தில் கேலிக்கிடமான மிஞ்சிய உற்பத்தி என்னும் வியாதி பரவுகிறது. இவ்வியாதி காரணமாக சமூகம் திடீரெனத் தன்னை மிகைச்ச இயல்புக்கு தற்காலிகமாகத் தாழ்த்திக் கொள்கிறது. இதனால் அழிவை உண்டாக்குகின்ற பஞ்சம் அல்லது சர்வநாசம் செய்யும் யுத்தம் ஏற்பட்டு ஜீவாதாரத்துக்கு ரிய பொருள்களின் விநியோகத்தைத்தடுத்து விட்டன போல் தோன்றுகிறது; பொருள் உற்பத்தியும் வியாபாரமும் அழிந்ததுபோல் தோன்றுகிறது. இவை ஏன் நிகழ்கின்றன? நாகரீகம் அதிகப்பட்டதாலும், ஜீவனுச்சத்திற்கு உள்ள வழிமுறைகள் அதிகப்பட்டதாலும் யந்திர சாதன முறையும் வியாபாரமும் அதிகப்பட்டதாலும் மேற்கூறியன நிகழ்கின்றன. சமூகத்தின் உபயோகத்திலிருக்கும் உற்பத்தி சக்திகள் பூர்ஷுவாக்களின் சொத்தை அபிவிர்த்திசெய்ய முடியாத கட்டத்தை அடைந்துவிட்டன. இதற்கு மாறாக, பூர்ஷுவாச் சொத்துக்களை வளர்ப்பதற்கு சாதகமான எல்லைகளை மீறி இவ் உற்பத்தி சக்திகள் பெலமடைகின்றன. இவ் எல்லைகள் இச்சக்திகளின் தளைகளாக மாறி அச்சக்திகளால் தகர்க்கப்படும் காலத்தில் பூர்ஷுவா சமுதாயம் முழுவதிலும் ஓர் சீர்கேடு ஏற்படுகின்றது. அதுமாத்திரமல்ல; பூர்ஷுவா சொத்து முறையே ஆபத்திற்குட்படுகிறது. பூர்ஷுவா சமுதாயமானது, தான் சிருஷ்டித்த ஐசுவரியத்தை தனக்குள்ளே அடக்குவதற்கு போதிய அளவு விசாலித்ததாகவில்லை. பூர்ஷுவாவர்க்கம் எப்படி இந் நெருக்கடியைச் சமாளிக்கிறது? அது தன் உற்பத்தி சக்தியின் ஓர் பெரும் பகுதியைத் தானாகவே கட்டாயப்படுத்தி அழித்தலாலும் புது மார்க்கட்டுகளைப் பிடித்தலாலும் பழைய மார்க்கட்டுகளைச் சம்பூர்ணமாகச் சுரண்டுவதாலும், நிலைமையைச் சமாளிக்கிறது. இன்னும் விஸ்தாரமான, இன்னும் பெரும் அழிவைக் கொண்டுவரக்கூடிய நெருக்கடிகளுக்கு வழி தேடுவதாலும் இனிவரும் நெருக்கடிகளைத் தடுப்பதற்

கேற்ற வழிகளைக் குறைப்பதாலுமே இது சாத்தியமாகிறது.

பூர்ஷுவாவர்க்கம் நிலப்பிரபுத்வத்தை எவ் ஆயுதங்களால்வெட்டி வீழ்த்தியதோ அவ் ஆயுதங்கள் அவர்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டிருக்கின்றன.

பூர்ஷுவாவர்க்கம் தனக்கு மரணத்தை விளைவிக்கும் ஆயுதங்களை உண்டாக்கினது மல்லாமல், அவ்வாயுதங்களை உபயோகப்படுத்தும் தற்காலத் தொழிலாளியையும் - புரோலிட்டேரியட்டையும் - சிர்ஷ்டித்திருக்கிறது.

பூர்ஷுவா வர்க்கம் - மூலதனம் - விருத்தியாகும் விகிதத்தில் புரோலிட்டேரியட்டும் விருத்தியாகிறது. இப்புரோலிட்டேரியட்வர்க்கம் வேலைகிடைக்கும்வரைக்கும் மாத்திரம் ஜீவிக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கமாகவும், தங்களுடைய தொழில், மூலதனத்தை விர்த்தி செய்யும் வரைக்குமே உழைப்பைப் பெறும் வர்க்கமாகவும் இருக்கின்றது. இக் கூலியுழைப்பாளிகள் தங்களைத் தனிப்பட்ட முறையில் விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு, மற்ற வியாபாரப் பொருள்களைப்போல ஆகின்றார்கள். இதனால் வியாபாரப் போட்டியினால் ஏற்படும் மாற்றங்களுக்கும் மார்க்கெட்டில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் எல்லாவற்றிற்கும் தொழிலாளிகள் ஆளாகின்றனர்.

பெருவாரியான அளவில் யந்திரசாதனத்தை உபயோகப் படுத்தப்படுவதாலும், தொழிற்பிரிவினையாலும், புரோலிட்டேரியட்டுடைய வேலை தனிப்பட்ட தன்மையை எல்லாமிழந்து, தொழிலாளி தன் தொழிலில் வைத்திருக்கக்கூடிய கவர்ச்சியை இழந்து விடுகிறான். அவன் யந்திரத்தின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறான்; அவனுக்கு வேண்டியது மிகவும் இலகுவானதும் ஒரேதன்மையானதும் இலகுவிற்பெறக்கூடியதுமான ஆற்றலுமே. ஆகையால்

ஒரு சொழிலாளியை உற்பத்திசெய்யும் செலவு எறக் குறைய சொழிலாளி உயிருடன் வாழ்வதற்குத் தேவை யான பொருள்களைப் பெறுதற்கும் தனது வர்க்கத் தாரைப் பெருக்குவதற்கும் ஏற்படும் செலவு மாத்தி ரமே. ஆனால், ஒரு பொருளின் விலையோ, தொழிற் சக்தியின் விலையோ, அதை உற்பத்தி செய்யும் செலவிற்குச் சமானமாகும். (ஆகையால் வேலையிற் பற்றின்மை கூடும் விகிதத்திற் சமபலமும் குறை யும். யந்திரசாதன உபயோகமும் வேலையிற் பிரியங் களும் அதிகப்படும் விகிதத்தில் உழைப்பின் கஷ்டமும் அதிகப்படுகிறது. மேலும் வேலைசெய்யும் நேரத்தைக் கூட்டுதலாலோ, குறித்தநேரத்தில் கூடிய வேலையைச் செய்வித்தலாலோ, யந்திரசாதனத்தின் வேகத்தை அதி கரித்தலாலோ வேலைக் கஷ்டம் அதிகரிக்கிறது. தற்கால யந்திரசாதனம் குடும்பஜமானனுடைய சிறுகைத்தொழில் பட்டடையைத் தொழில் மூதலாளியுடைய பெரிய யந் திரத்தொழிற் சாலையாக மாற்றிவிட்டது. தொழிலாளர் குழாம்கள் தொழிற்சாலைக்குள் திரட்டப்பட்டு ஒருசே னையைப்போல் அமைக்கப்பட்டிருக்கின்றனர். தொழிற் சேனையிலுள்ள சாதாரணப் போர்வீரராக, அவர்கள் ஆபீசர்கள், சார்ஜண்டுகள் முதலியவர்கள் அமைந்த ஒரு திறம் ஆட்சி அரணின்கீழ் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பூர்ஷுவாவர்க்கத்தினுடைய அடிமைகள் மாத் திரமல்லாமல் பூர்ஷுவா அரசாங்கத்தின் அடிமைகளா கவுமிருக்கிறார்கள். ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு நாளும் யந்திரத்தாலும் மேற்பார்வையாளராலும், எல்லா வற்றிற்கும மேலாக, தனிப்பட்ட பூர்ஷுவா முதலாளி களாலும் அவர்கள் அடிமைப்படுத்தப் படுகிறார்கள். இந்த கொடுங்கோல் ஆதிக்கம், லாபமே தன்னுடைய குறிக்கோள் என்று எவ்வளவு பகிரங்கப்படுத்துகிறதோ அவ்வளவுக்கு உவ்வாதிக்கம் அற்பமும் வெறுக்கக்கூடி யதாகவும் இருக்கிறது.

கையால் செய்யப்படும் வேலையில் உபயோகிக்கப் படும் சரீரபலமும் சாமர்த்தியமும் எவ்வளவு குறைவா கத் தேவைப்படுகிறதோ, அதாவது தற்கால யந்திரசா தனமுறை எவ்வளவுக்கு அபிவிருத்தியடைகிறதோ, அவ் வளவிற்கு ஆண் தொழிலாளியின் இடம் பெண்தொழி லாளியால் எடுக்கப்படுகிறது. இனிமேல் தொழிலாளவர்க் கத்தில் வயது வித்தியாசங்கள், ஆண் பெண் வேறுபாடு கள், சமூக தேவைகளுக்குக் கருத்துள்ளதாக இருக்க முடியாது. எல்லாரும் வேலையின ஆயுதங்களாகவும், வயது வேறுபாடு, ஆண்பெண் வேறுபாடு இவைகளுக்கு ஏற்ற விலையுள்ளவர்களாகவும் மாறுகிறார்கள்.

தொழிலாளிமீது சுமத்தப்படும் தொழில் முதலாளி யின் சுரண்டல், அத்தொழிலாளி தனது சம்பளத்தைப் பெறும்பொழுது முடிந்ததும், அத்தொழிலாளி பூர்ஷ் வாவர்க்கத்தின் மற்றைய பகுதிகளாகிய நிலச்சொந்தக் காரன், கடைக்காரன், லேவாதேவிக்காரன் முதலியவர்க ளால் சுரண்டப்படுகிறான்.

மத்திய வகுப்பாரின் கீழ்ப்படியிலுள்ள - அதாவது சிறுகைத்தொழிற் காரர்கள், சிறு வியாபாரிகள், பொது வாகக் கைத்தொழில்செய்து இலேப்பாற்றுபவர்கள், எல்லா விவசாயிகளும் சிறுகைத்தொழில் செய்பவர்களும்- மெல்ல மெல்ல புரோலிட்டேரியட்டாகத் தாழ்ந்துவரு கின்றனர். இதற்குக்காரணம் இவர்களுடைய சிறு மூலதனம் தற்கால யந்திரசாதன உற்பத்திமுறையைக் கைக்கொள்ளப் போதாததும், பெரிய முதலாளிகளுடைய போட்டியினால் நசுக்கப்படுவதுமே. மேலும் -புதுஉற் பத்தி முறைகளால் அவர்களுடைய தொழிற்சாமர்த்

தியம் பிரயோசனமற்றதாய் விடுதலும் மற்றோர்காரண மாகும். இப்படியே புரோலிட்டேரியட் வர்க்கம் சகல வகுப்புகளிலுமிருந்து திரட்டப்படுகிறது.

புரோலிட்டேரியட் வர்க்கம் அனேக வளர்ச்சிக் கட்டங்களுக்கூடாகச் செல்கின்றது. அதன் பிறப்புடன் பூர்ஷுவா வர்க்கத்துடன் போராட்டமும் ஆரம்பிக்கிறது. முதலில் தனிப்பட்ட தொழிலாளர்களாலும், பின் ஒரு இடத்திலுள்ள ஒரே விதமான தொழிலில் ஈடுபட்டவர்க ளாலும் தங்களைச் சுரண்டும் தனிப்பட்ட பூர்ஷுவா விற்கு எதிராக இப்போராட்டம் நடத்தப்படுகிறது. அவர் கள் பூர்ஷுவா உற்பத்தி சூழ்நிலைக்கு எதிராக வல்லா மல், உற்பத்தி சாதனங்களின மேலேயே தங்கள் தாக்கு தல்களை நடத்துகிறார்கள். அவர்கள் தங்கள் தொழிலுடன் போட்டி போடும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி யான சரக்குகளை அழித்துப், யந்திரங்களை உடைத்தெறிந் தும், தொழிற்சாலைகளைத் தீக்கிரையாக்கியும், வலோற்கார மாக மத்தியகாலத் தொழிலாளி பெற்றிருந்து இப்போ அழிந்த ஸ்திதியை மீளவும் ஸ்தாபிக்க முயற்சிக்கிறார்கள்.

இக் கட்டத்தில் தொழிலாளர் தேசமுழுவதும் சிதறியும், அவர்களுக்குள் ஏற்படும் போட்டியால் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டுமிருக்கிறார்கள். எங்கேயாவது அவர்கள் ஒன்று திரண்டு தாக்கும் சக்தியுள்ள ஒரு கூட் டங்களாக விருக்கிறார்களென்றால் அது அவர்களுடைய ஊக்கமான சேர்க்கையல்ல; இதற்குக் காரணம் பூர் ஷுவா வர்க்கத்தின் ஐக்கியமும், அவர்கள் தம் அரசியல் நோக்கங்களை அடைவதற்காக புரோலிட்டேரியட் வர்க் கத்தை இன்னமும் முற்செலுத்தக் கூடிய நிலையிலிருந்து கொண்டு புரோலிட்டேரியட்டை இயக்குவதுமே. இக் காலத்தில் அவர்கள் தங்கள் பகைவர்களுடன் சண்டை

போடாமல் தங்கள் பகைவர்களின் பகைவர்களான எஞ்சியிருக்கும் எதேச்சாதிகார மன்னர்களையும், நிலப்பிரபுக்களையும், யந்திரத் தொழிலில் ஈடுபடாத மற்ற பூர்ஷுவாக்களையும், எதிர்த்துச் சண்டைபோடுகிறார்கள். இதனல் சரித்திர சம்பந்தமான வளர்ச்சி முழுவதும் பூர்ஷுவாக்களுடைய கையில் அடங்கியிருக்கின்றது. ஆதலால், இயக்கத்தால் ஏற்பட்ட ஒவ்வொரு வெற்றியும் பூர்ஷுவாக்களின் வெற்றியே.

யந்திர அபிவிர்த்தியுடன் புரோலிட்டேரியட் வர்க்கத்தின் தொகை பெருகியது மாததிரமல்லாமல், அது கூடிய தொகைகளாக ஒரே இடத்தில சேர்க்கப்பட்டுத் தன் பலனை அதிகரித்துத் தன பலனையும் உணருகின்றது. யந்திரசாதனம் தொழிற்பாகுபாடுகளை அழித்துக் கூலியை எங்கும் ஒரே குறைந்த அளவிற்குக் குறைத்து, கூலியைச் சமமாக- கூலியில் ஏற்றம் தாழ்வு இல்லாமல் - கொண்டு வரும் வேகத்தில் புரோலிட்டேரியட்டினுள்ள வெவ்வேறு வாழ்க்கை முறைகளும் அபிலாஷைகளும் வரவரச் சமநிலையடைந்துகொண்டிருக்கின்றன. பூர்ஷுவாக்களுக்குள் வளரும் போட்டியும், அதனல் ஏற்படும் வியாபார நெருக்கடிகளும், தொழிலாளருடைய கூலியை இன்னும் கூட நிலையற்றதாக்குகிறது. இடைவிடா யந்திர அபிவிர்த்தி பிக வேகமாக வளர்ச்சியுறுவதாலும், தொழிலாளருடைய ஜீவியம் வரவர அந்தரமாகின்றது. தனிப்பட்ட தொழிலாளிகளுக்கும் தனிப்பட்ட பூர்ஷுவாக்களுக்கும் இடையே ஏற்படும்போராட்டமானது, வரவர இரு வர்க்கங்களுக்குமிடையே நடக்கும் போராட்டத் தன்மையை அடைகின்றன. ஆகையால், தொழிலாளர் பூர்ஷுவாகளுக்கு எதிராக ஸ்தாபனரீதியாகத் தொழிற் சங்கங்களை அமைக்கின்றனர். அவர்கள் கூலிவிகிதத்தை கூட்டுவ

தற்கு ஒருங்குதிரளுகின்றனர். அடிக்கடி எற்படும் புரட்சிக்கு எற்கனவே தயார்ப்படுத்துவதற்காக நிலையான சங்கங்களை அமைக்கின்றனர். இப்போராட்டமானது சிற்சில இடங்களில் கலகங்களாகக் கிளம்புகின்றது.

சில சமயங்களில் தொழிலாளர் வெற்றியும் அடைகின்றனர். ஆனால் இவ் வெற்றி தற்காலிகமானதே. அவர்களுடைய போராட்டத்தின் உண்மைப் பலன், அப்போது கிடைக்கும் சிறு வெற்றிகளல்ல; இப்போராட்டங்களால் வளர்ந்துவரும் தொழிலாளிகளின் ஐக்கியமே உண்மைப் பலன். தற்காலயந்திரசாதனம் எற்படுத்திய முன்னேற்றமான போக்குவரத்து சாதனங்களால், பல்வேறு இடங்களிலுள்ள தொழிலாளர், ஒருவரோடொருவர் தொடர்புவைத்து இவ்வேற்றுமையை அதிகரிக்கின்றனர். ஒரேதன்மைவாய்ந்த, பல்வேறுபகுதிகளில் கடந்த போராட்டங்களை ஒன்றுபடுத்தி வர்க்கங்களுக்கு இடையே நடக்கும் ஓர் தேசியப்போராட்டமாக மாற்றுவதற்கு இத்தொடர்பே தேவையாக இருந்தது. ஆனால் ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஓர் அரசியல் போராட்டமேயாகும். புரோலிட்டேரியட்டுகள் தங்களிடையே ஐக்கியத்தை ரயில் வேக்களின் உதவியால் சில வருஷங்களுக்குள் பெற்றார்கள். ஆனால் இதே ஐக்கியத்தை மத்திய காலத்திலுள்ள பட்டண வியாபாரிகள் அக்காலத்திலுள்ள தங்களது மோசமான போக்குவரத்துச் சாதனங்களைக்கொண்டு பல நூற்றாண்டுகளில் அடைந்தார்கள். புரோலிட்டேரியட்டுகளை ஒரு வர்க்கமாக ஸ்தாபித்தலும், இதன் பலனாக அவர்களை ஓர் அரசியல் கட்சியாக அமைப்பதும் தொழிலாளருக்குள் எற்படும் போட்டியால் அடிக்கடி கலைக்கப்படுகின்றது. அப்படிக் கலைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் முன்னிருந்ததைவிட உறுதிபுள்ளதாக

வும், பலமுள்ளதாகவும், இவ்வர்க்கம் திளம்புகிறது. பூர்ஷுவா வர்க்கத்தாருக்குள் உள்ள பிளவுகளைப் பயன் படுத்திக்கொண்டு அது தொழிலாளருடைய குறிக்கப் பட்ட நலன்களைச் சட்டரீதியாக அங்கீகரிக்கும்படி இவ் வர்க்கம் நிர்ப்பந்திக்கின்றது. இவ்வழியால்தான் இங்கிலாந்தில் பத்துமணிநேர வேலை மசோதா அங்கீ கரிக்கப் பட்டது.

மேலும் பழைய சமூகத்திலுள்ள வர்க்கங்களுக் கிடையே எற்படும் மோதல்கள் புரோலிட்டேரியட்டின் வளர்ச்சிக்கு அனேக வழிகளில உதவிபுரிகின்றன. பூர் ஷுவா வர்க்கம் தான் எப்பொழுதும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதைக் காண்கின்றது. முதலில் பிரபு வர்க் கத்துடனும் பின்பு தன வர்க்கத்தாருடன் யந்திரசாதன உற்பத்தி வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விருக்கும் பகுதிகளுடனும், எப்பொழுதும் மற்றத்தேச பூர்ஷு வாக்களுடனும் போராடுகின்றது. இப்போராட்டம் எல்லாவற்றிலும் பூர்ஷுவாவர்க்கம் புரோலிட்டேரியட் டிடம் உதவிகோரி அணையும் அரசியல் அரங்கிற்கு இழுக்கவேண்டிய நிலை எற்படுகிறது. இதனால் பூர்ஷுவா வர்க்கமே புரோலிட்டேரியட்டுக்கு அரசியல் கல்வியிலும், பொதுக்கல்வியிலும், ஆரம்பப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கின்றது. அதாவது தன்னை எதிர்த்துப் போராடு வதற்குரிய ஆயுதத்தைப் புரோலிட்டேரியட்டிடம் பூர் ஷுவாவர்க்கம் கொடுக்கிறது.

மேலும் யந்திரசாதன உற்பத்திபால் அதிகார வர்க் கங்களின் பெரும் பகுதிகளிற் சில புரோலிட்டேரியட் வர்க்கத்துக்குள் வீழ்த்தப்படுகின்றன என்பதை யாம் அறிந்தோம். மேலும் இங்கிலையை யடையாத வேறு சில பகுதிகளின் வாழ்க்கைநிலை நிலையற்றதாக்கப்படுகின்ற

தென்பதையும் அறிந்தோம். இவர்களும் புரோலிட்டேரியட்டுக்குப் புதிய அறிவுப் பிரகாசத்தையும் முன்னேறக் கூடிய சக்தியையும் கொடுக்கின்றன.

கடைசியாக வர்க்கப்போராட்டம் உச்சிக்கட்டத்தை யடையும்போது அதிகாரவர்க்கத் திடையேயும் பழையச முதாய முழுவதிலும் ஏற்படுகின்ற சிதைவு மறைக்கமுடியாத விதமாக வளர்கிறது. அப்பொழுது அதிகாரவர்க்கத்தின் ஓர் சிறியபகுதி தனது வர்க்கத்தை விட்டுப்பிரிந்து, எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பிரதான பொறுப்பைப்பெற்ற புரட்சிவாத வர்க்கத்தைச் சேர்கின்றது. முற்காலத்தில் பிரபுவர்க்கத்தின் ஒரு பகுதி பூர்ஷுவா வர்க்கத்துடன் போய்ச்சேர்ந்தமாதிரி இப்போ பூர்ஷுவாவர்க்கத்தின் ஒரு பகுதியும், குறிப்பாக பூர்ஷுவா தத்துவப் பிரசாரகருள் ஒரு பகுதியும் (அதாவது சரித்திரவளர்ச்சி முழுவதையும் தத்துவரீதியில் விளக்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெற்றவர்கள். புரோலிட்டேரியட்டில் வந்து சேருகின்றது.

பூர்ஷுவாவர்க்கத்தை எதிர்த்துநிற்கும் வர்க்கங்களில் புரோலிட்டேரியட் வர்க்கமொன்றே உண்மையில் புரட்சிகரமானது. மற்றவர்கள் எல்லாம் தற்கால யந்திரத்தின் முன்னிற்கமுடியாமல் உழுத்து மக்கி மடிந்துபோகின்றன. ஆனல் புரோலிட்டேரியட் யந்திரசாதனத்தின் விஷேடித்ததும் இன்றியமையாததுமான சிருஷ்டி.

மத்தியவகுப்பின் கீழ்ப்பகுதிகளாகிய சிறுகைத் தொழிற் காரனும், சிறுவியாபாரியும், பிரத்தியேகத்தேர்ச்சி பெற்ற தொழிலாளியும், விவசாயியும் பூர்ஷுவாவர்க்கத்தை எதிர்ப்பதற்குக்காரணம்: தாங்கள் மத்தியவகுப்பின் சிறுபகுதிகளாக விருப்பதைப் பாதுகாப்பதற்கே.

ஆகவே அவர்கள் புரட்சிகரமானவர்களல்லாது பிற்போக்கு மனப்பான்மை யுள்ளவர்களாகின்றனர்; அவர்கள் சரித்திரத்தின் போக்கைப் பின்னுக்கிழுப்பதால் பிற்போக்குவாதிகளுமாகின்றனர். தற்செயலாக அவர்கள் புரட்சிகரமாக விருக்கிறார்கள் என்றால் தாங்கள் புரோலிட்டேரியட்டாக மாறிவிடுவோமோ என்ற பயத்தினால் தான். ஆகவே இவர்கள் தங்களது தற்காலநலன்களைப் பாதுகாக்காமல் தங்கள்வருங்கால நலன்களையே பாதுகாக்கின்றனர். புரோலிட்டேரியட்டுகளினுடன் சேர்ந்து நிற்பதற்காகத் தங்கள் நிலையை விட்டுவிடுகிறார்கள்.

பழைய சமுதாயத்தின் கீழ்ப்படிகளிலிருந்து எழுந்து உத்வேக மற்றுப் பழுதடைந்து கொண்டுபோகும் கூட்டம் - அதாவது சமுதாயத்தின் சுப்பைகூளமென்றும் அபாயகரமான வகுப்பென்றும் சொல்லப்படுபவர்கள் - சிற்சில சமயங்களில் புரோலிட்டேரியட் புரட்சிக்குள் சேர்க்கப்படவும் கூடும்; இவர்களின் வாழ்க்கைமுறை யானது அவர்களிற் பெரும்பான்மையோரை பிற்போக்கு வாதிகளின் சூழ்ச்சிக் கேதுவான கூலிகளாக்கின்றனர்.

புரோலிட்டேரியட்டின் சூழ்நிலையில் பழையசமூக நிலைகளெல்லாம் அனேகமாகத் தாழ்த்தப் பட்டுவிட்டன. புரோலிட்டேரியட்டுக்குச் சொத்து ஒன்றும் கிடையாது. அவனுக்கும் அவனுடைய மனைவிமக்களுக்கும் உள்ள தொடர்பிற்கும், பூர்ஷுவா வர்க்கத்தாரிடையே நிலவும் குடும்பத் தொடர்புக்கும் யாதொரு ஒற்றுமையும் கிடையாது. நவீனயந்திரத்தொழில் - அதாவது தற்கால மூலதனத்திற்கு அடிமையான தொழில் - இங்கிலாந்தைப் போலவே, பிராஞ்ச், அமெரிக்கா, ஜெர்மனி முதலிய நாடுகளிலும், தொழிலாளியிடமிருந்து தேசிய இயல்புகளே துளியளவுகூட வில்லாமல் உரித்தெறிந்து விட்டது. சட்டம் தர்மிக்கக்கோட்பாடு சமயம் என்பனவெல்லாம் பூர்

ஷுவா வர்க்கத்தினுடைய அர்த்தமற்ற எண்ணங்களை னவும் அவைகளெல்லாம் பூர்ஷுவாவர்க்கத்தின் நலன் களை மறைவில் வைக்கும் போர்வைகள் எனவும் தொழி லாளி கருதுகிறான்.

இதற்குமுன் அதிகாரத்திற்கு வந்த வர்க்கங்களெல் லாம், உற்பத்தியாகும் பொருட்களைத் தங்களுக்குச் சொந்தமாக்குவதற்குச் சார்பாகச் சமுதாயத்தைக் கட் டுப்படுத்தித் தாங்கள் ஏர்கனவே அடைந்த ஸ்திதியை அரண்செய்ய முயற்சித்தார்கள். தங்களுடைய ஸ்தி யத்தைப் பெறுவதற்காகத் தாங்களே, முன் பின்பற்ற முறையை அழித்தும் அதன்மூலம் முன்புஉள்ள சொத்துத் தேடும் முறைகள் எல்லாவற்றையும் அழித்தமே புரோலிட் டோரியட்டுகள் சமுதாயத்தின உற்பத்திச் சக்திகளின் எஜமானர்களாக வரமுடியும். அவர்களுக்கு தங்களுடைய தென்று சொல்லிப் பெறுவதற்கும் பாதுகாப்பதற்கும் ஒன்றுமில்லை. தனிப்பட்டவர்களுடைய சொத்துக்களுக் குத் தேவையான முன்னுள்ள பாதுகாப்புக்களை அழிப் பதே அவர்களுடைய கடமை.

முன் ஏற்பட்ட எல்லாச் சரித்திர பூர்வமான இயக்கங்களெல்லாம் சிறுபான்மையோருடை இயக் கங்களாக அல்லது சிறுபான்மையோருடைய நலத்தைப் பாதுகாக்கும் இயக்கங்களாக விருந்தன. புரோலிட டோரியட் இயக்கமாவது பெரும்பான்மையோரின் நலன் களைப் பாதுகாப்பதற்காக அப் பெரும்பான்மையோரால் ஏற்படுத்தப்பட்ட தன் உணர்சியுள்ள சுயேச்சையான இயக்கம். மரபிறற் பெலமடைந்த சமூகத்தின் மேற்ப டையைத் தகர்க்காமல் இன்றைய சமுதாயத்தின் அடிப் படையினுள்ள புரோலிட்டோரியட் வர்க்கம் அசையவோ, தன்னை உயர்த்தவோ முடியாது.

புரோலிட்டோரியட் பூர்ஷுவாவுடன் நடத்தும் போராட்டமானது தொடக்கத்திற் தேசீயப்போராட்டத்

நின் ரூபத்தை எடுக்காவிட்டாலும் அதன் தன்மையைப் பெறுகிறது. ஒவ்வொரு தேசப் புரோலிட்டேரியட்டும் முதலில் தங்கள் தங்கள் பூர்ஷுவாக்களுடனேயே தங்கள் போராட்டத்தை நடத்திமுடிக்க வேண்டும்.

தற்போதைய சமூகத்தினுள் ஓர் அளவிற்கு மறைமுகமாக நடக்கும் போராட்டம் வளர்கின்றதென்றும், அப்போராட்டம் பகிரங்கப் புரட்சியாக மாறவேண்டிய நிலை ஏற்படுகின்றதென்றும், அந்நிலையில் பூர்ஷுவா வர்க்கத்தின் அதிகாரம் பலாத்காரமாக வீழ்த்தப்படுவதால் புரோலிட்டேரியட்டின் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரமிடப்படுகின்றதென்றும் புரோலிட்டேரியட்டின் வளர்ச்சியின் பிரதான கட்டங்களை விவரிக்கும்போது விளக்கினோம்.

நாங்கள் இதுவரையும் பரிசீலனை செய்ததின்படி, இதுவரையிலுமுள்ள ஒவ்வொரு சமூகங்களின் அமைப்பும் சுரண்டுவோர் சுரண்டப்படுவோர் எனும் இரு சாராருக்கும் இடையே உள்ள பகையின் அஸ்திவாரத்தின் மேலேயே கட்டப்பட்டிருந்தனவென்பதை அறிந்தோம். ஆனால் ஒரு வாக்கத்தைச் சுரண்டுவதற்கு அவ்வடிமைத்தனத்திலாவது அது நிலைத்திருப்பதற்குச் சாதகமாகச் சில அம்சங்கள் இருக்கவேண்டும். பண்ணை அடிமை முறையின் கீழிருந்த அடிமை, தன்னை கம்யூனில் ஒருவனாக உயர்த்திக்கொண்டது போல, நிலப் பிரபுத்துவ எதேச்சாதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்கு அமைந்த சிறு வியாபாரி பூர்ஷுவாவாக விர்த்தியடைந்தான். ஆனால் இதற்கு மாறுகத் தற்காலத் தொழிலாளி, தற்கால யந்திரத் தொழில் அபிவிர்த்தியுடன் மேல் எழாமல் தன் வர்க்கத்திற்குள்ள நிலையிலிருந்தும் கீழே தாழ்ந்து கொண்டே யிருக்கிறான். அவன் ஆண்டியாகிவிடுகிறான். ஜனத்தொகையும் செல்வமும் பெருகுவதிலும் பார்க்க வறுமை

வேகமாகப் பெருகுகின்றது. இந்நிலையில் பூர்ஷுவா வர்க்கம், சமூதாயத்தில் அதிகார வர்க்கமாக விருக்கவும், தான் நிலைத்திருக்கக்கூடிய வாழ்க்கை முறைகளைச் சமூகத்தின் மேல் சட்டமாக்கவும், இனி தகுதியற்றதாகிறது. தனது அடிமைக்கு அவனது அடிமை நிலையிலாவது வாழ்வதற்குச் சந்தர்ப்பமளிக்கத் தகுதியற்றபடியாலும் அவனின் உழைப்பாற் தனது உணவைப் பெறுது அவனுக்கு உணவு ஊட்ட வேண்டிய நிலைக்கு அவனை வீழாது தடுக்க முடியாததாலும், பூர்ஷுவாவர்க்கம் அதிகாரம் செலுத்தத் தகுதியற்றது. சமூகம் இனிமேல் ஒரு பொழுதும் பூர்ஷுவாவர்க்கத்தின்கீழ் இயங்க - அதாவது அதனுடைய வாழ்க்கை சமூகத்துடன் இணங்க முடியாது.

பூர்ஷுவாவர்க்கம் இருப்பதற்கும் அதிகாரம் செலுத்துவதற்கும் மூலகாரணமாயிருப்பது மூலதன சிருஷ்டியும் பெருக்கமுமே. மூலதன அபிவிர்த்திக்குச் சாதகமாயுள்ளது கூலி உழைப்பே. தொழிலாளரிடையேயுள்ள போட்டியிலே கூலி உழைப்பு முற்றுகத் தங்கியிருக்கிறது. பூர்ஷுவா வர்க்கம் இன்றியமையாது வளர்க்கும் தொழில் அபிவிர்த்தியே தொழிலாளருக்குள் போட்டியினால் ஏற்பட்ட தனிமையை நீக்கி, தொடர்பால் ஏற்படும் புரட்சிகரமான சேர்க்கையை ஏற்படுத்துகிறது. ஆகையால், தற்கால யந்திரத்தொழில் அபிவிர்த்தி, பூர்ஷுவா வர்க்கத்தின் பொருள் உற்பத்தி சொத்தாக்கும் முறைகளின் அஸ்திவாரத்தை அவ் வர்க்கத்தின் கீழிருந்து அகற்றிவிடுகிறது. ஆகையால் எல்லாவற்றிற்கும் மேலாக பூர்ஷுவா வர்க்கம் உற்பத்தியாக்குவது என்னவென்றால் தன் சமக் கடன்களைச் செய்பவர்களை என்றே சொல்லவேண்டும். ஆகையால் பூர்ஷுவாவர்க்கத்தின் வீழ்ச்சியும் புரோலிட்டேரியட்டின் வெற்றியும் ஒரே அளவிற்குத் தவிர்க்க முடியாதனவே.

II

புரோலிட்டேரியட்டுகளும் கம்யூனிஸ்டுகளும்

புரோலிட்டேரியட் அனைத்துடனும் கம்யூனிஸ்டுகள் என்ன சம்பந்தத்துடனிருக்கிறார்கள்?

மற்றும் தொழிலாள வர்க்கக் கட்சிகளுக்கு எதிரான ஒரு பிரத்தியேகமான ஒரு கட்சியை கம்யூனிஸ்டுகள் ஸ்தாபிக்கவில்லை.

புரோலிட்டேரியட் முழுவதற்கும் பொதுவாக உள்ள நலன்களைத் தவிர கம்யூனிஸ்டுகளுக்கெனப் பிரத்தியேகமான நலன்கள் கிடையா.

புரோலிட்டேரியட் இயக்கத்தை உருவம் கொடுத்து வழப்பதற்காகத் தங்களுக்கே பிரத்தியேகமான கொள்கைகளை ஸ்தாபிக்கவில்லை.

கம்யூனிஸ்டுகள் மற்ற எல்லாத் தொழிலாளிவர்க்கக் கட்சிகள் எல்லாவற்றிலுமிருந்து இரண்டு விதங்களில் வேறுபடுகின்றனர். முதலாவதாக வெவ்வேறு தேசங்களில் புரோலிட்டேரியட்டுகள் நடத்தும் போராட்டங்களில் தேசியத் தன்மையால் பாதிக்கப்படாது, புரோலிட்டேரியட் வர்க்கம் முழுவதற்கும் பொதுவாக உள்ள நலன்களை கம்யூனிஸ்டுகள் சுட்டிக்காட்டி அவைகளுக்கு முதல் ஸ்தானம் கொடுக்கின்றனர். இரண்டாவதாகத் தொழிலாளிவர்க்கம் பூர்ஷுவா வர்க்கத்துடன் நடத்தும் போராட்டத்தின் பல கட்டங்களிலும் கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் எல்லாவிடக்களிலும் அவ்வியக்கம் முழுவதற்குமுரிய நலன்களையே ஆதரிக்கின்றனர்.

ஆகையால் கிரியாம்சமுறையில் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் முன்னணியில் மனதிடத்துடன் நிற்கும் பகுதியாகவும், தொழிலாளிவர்க்கத்தின் மற்றெல்லாப் பகுதிகளையும் முற்செலுத்தும் பகுதிகளாகவுமிருக்கிறார்கள். அதோடு தத்வசம்பந்தமாகப் புரோலிட்டேரியட்டின் இயக்கத்தின் முன்னேற்றவழி, சூழ்நிலை, இறுதியாகக் கிடைக்கக்கூடிய பலன்கள் ஆகியவற்றைத் தெளிவாக விளக்கக்கூடிய ஆற்றல் புரோலிட்டேரியட்டின் பெரும் பகுதியிலும் பார்க்கப்பெற்றிருக்கிறார்கள்.

மற்றெல்லாப் புரோலிட்டேரியட் கட்சிகளைப்போலக் கம்யூனிஸ்டுகளுடைய உடனடியான நோக்கம் புரோலிட்டேரியட்டை ஒருவர்க்கமாக உருப்படுத்துவது, பூர்ஷுவா அதிகாரத்தைக் கவிழ்ப்பது, புரோலிட்டேரியட் வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஆகியவைகளே.

கம்யூனிஸ்டுகளுடைய சித்தாந்த முடிபுகள் எவ்வழியிலாவது உலகம் முழுவதையும் திருத்தியமைப்போமெனப் பறைசாற்றும் எந்தப் பேர்வழியாலும் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணங்கள் கொள்கைகளிலிருந்து பிறந்தனவல்ல.

எங்கள் கண்களுக்கு முன்னால் நடந்துகொண்டிருக்கும்சரித்திரவளர்ச்சியிலிருந்தும், இப்போ நடக்கும் வர்க்கப் போராட்டத்திலிருந்தும் எழுகின்ற உண்மையான தொடர்புகளைப் பொதுவான முறையில் விளக்குகின்றார்கள். அமூலிலிருக்கும் சொத்துத்தொடர்புகளை அழித்தல் கம்யூனிஸத்தின் விசேஷலக்ஷணமல்ல.

சரித்திர நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றத்தின் பலனாக எல்லாச் சொத்துத் தொடர்புகளும் காலத்திற்குக்

காலம் சரித்திரப்பிரசித்தியான மாற்றத்தை அடைந்திருக்கின்றன.

உதாரணமாக பிரஞ்ச் புரட்சி நிலப்பிரபுத்வ சொத்தை அழித்துப் பூர்ஷுவா சொத்தை ஸ்தாபித்தது.

கம்யூனிஸத்துடைய தனிப்பெரும் லக்ஷணம் பொதுவாகச் சொத்து ஒழிக்கப்படுவதை அழிப்பதல்ல: ஆனால் பூர்ஷுவாக்களின் சொத்துரிமையை அழிப்பதே. ஆனால் அனேகரை ஒரு சிலர் சுரண்டுதலின்மீதும், வர்க்க விரோதங்களின்மீதும் அமைக்கப்பட்ட பொருளுற்பத்தி சொத்தாக்கும் முறையின் இறுதியான பரிபூரணமான ரூபமே தற்கால பூர்ஷுவா தனி உடமைச் சொத்து.

இந்தக் கருத்தின்படி கம்யூனிஸ்டுகளின் கொள்கை ஒரு வசனத்திலேயே சுருக்கப்படலாம்: தனி உடமைச் சொத்தை அழிப்பதே.

கம்யூனிஸ்டுகளான நாங்கள் தனிப்பட்டவர் தன் முயற்சியின் பயனால் கிடைக்கும் பொருளைத் தனது சொத்தாக்கும் உரிமையை அழிக்க விரும்புகிறோமென்று குற்றம் சாட்டப்படுகிறோம். அதோடு இத்தகையசொத்து தனிப்பட்டவரின் சுதந்திரம், தனிப்பட்டவரின் முயற்சி, சுதந்திரம் ஆகியவற்றின் அஸ்திவாரமென்றும் கூறப்படுகிறது.

கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளென்று சொல்கிறீர்களே! இப்படிச்சொல்லும்போது சிறுகைத்தொழில், சிறு வியாபாரம் செய்தோருடைய சொத்தை - அதாவது சொத்தென்பது பூர்ஷுவாச்சொத்தாக முன்பு பெற்றிருந்த ரூபத்தை – குறிக்கிறீர்களா? இவ்விதச் சொத்தை இப்போ அழிக்கத்தேவையில்லை. யந்திரசாதன உற்பத்திமு

றையின் வளர்ச்சி அநேகமாக இதை அழித்தும் விட்டது: ஒவ்வொருநாளும் அழித்தும் கொண்டுவருகிறது.

அல்லது நீங்கள் தற்கால பூர்ஷுவா தனிஉடமைச் சொத்தையா கருதுகிறீர்கள்?

ஆனால் கூலி உழைப்பு, தொழிலாளிக்காக எதாவது சொத்தை உற்பத்திசெய்கின்றதா? இல்லவே இல்லை: அது மூலதனத்தையே உற்பத்திபண்ணுகிறது. இவ்விதசொத்துரிமை கூலி உழைப்பைச் சுரண்டுந்தன்மையையும், மேலும் சுரண்டுவதற்காக புதுத் தொழிலாளரை சிருஷ்டியாது வளரமுடியாத தன்மையையும் பெற்றிருக்கின்றது. இன்றைய ரூபத்தில் உள்ள சொத்து மூலதனத்துக்கும் கூலி உழைப்பிற்கும் இடையேயுள்ள விரோதத்தின்மீது அமைக்கப்பட்டதே. இவ்விரோதத்தின் இரு அம்சங்களையும் கவனிப்போம்.

மூதலாளியா யிருப்பதற்கு பொருள் உற்பத்தியில் தனிப்பட்டவர் சம்பந்தமாகவுள்ள அந்தஸ்து மாத்திரமல்லாமல் சமூக அந்தஸ்தும் இருக்கவேண்டும். மூலதனம் அனேகரின் சிருஷ்டியே; அது அநேக அங்கத்தினரின் ஒன்றுபட்ட செய்கையால் மாத்திரம் - இல்லை இறுதிக் கட்டத்தில் சமூகத்தின் எல்லா அங்கத்தினருடைய ஒன்றுபட்ட செய்கையால் மாத்திரமே - இயக்கப்பட முடியும்.

ஆதலால் மூலதனம் தனிப்பட்டவருடைய சக்தியல்ல: அது ஓர் சமூகசக்தியே.

ஆகையால் மூலதனம் பொதுச்சொத்தாக மாற்றப்படும்போது - அதாவது சமூகத்திலுள்ள எல்லா அங்கத

தவர்களுடைய சொத்தாக மாற்றப்படும்போது - தனிப் பட்டவரின் சொத்து சமூகத்தின் சொத்தாக்கப்படுவ தில்லை. அச்சொத்து சமூகத்தில் பெற்றிருந்த தன்மையே மாற்றப்படுகின்றது. ஓர் வர்க்கத்தின் சொத்தாகவிருந்த அது வர்க்கவியல்பை இழக்கிறது.

கூலி உழைப்பை இனி ஆராய்வோம்.

தொழிலாளி, தொழிலாளியாகவே சீவிப்பதற்கு இன்றியமையாது தேவையான வாழ்க்கை வசதிகளைக் கொடுக்கும் குறைந்த கூலியே கூலி உழைப்பின் சராசரி விலையாகிறது. ஆகையால் கூலி உழைப்பாளி தன்னு டைய கூலியின் மூலம் தனதாக்குவது, அவனுடைய சீவி யத்தை ஒருவாறு இழுத்துக்கொள்ளவும் தன்னைப் போன்ற உழைப்பாளிகளை உற்பத்தி செய்வதற்குமே போதுமானது. கூலியின் பயனை ஒருவர் இவ்விதம் தன தாக்கும் முறையை அழிக்க நாங்கள் ஒருபோதும் எண்ண வில்லை. எனெனில் இம்முறை மற்றவர்களின் உழைப் பைக் கட்டுப்படுத்தக்கூடிய எவ்வித மிகுதியையும் கொடுக்காது தொழிலாளியின் வாழ்வை ஆதரிக்கவும் தன்னைப்போன்ற தொழிலாளிகளை உற்பத்தி செய்யவுமே சாதகமாகின்றது. மூலதனத்தை அதிகரிப்பதற்கு மாத் திரம் தொழிலாளி வாழ்வது, ஆளும் வர்க்கத்தின் நலன் தேவைப்படும்வரை மாத்திரம் தொழிலாளியை ஜீவிக்க விடுதல், ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ள இச் சொத் தாக்கும் முறையின் பாழான இயல்பையே வேரோடு அழிக்க விரும்புகிறோம்.

பூர்ஷுவா சமுதாயத்தில், உயிர் உள்ள தொழிலாளி சேர்த்து வைக்கப்பட்ட தொழிற்சக்தியை அதிகரிக்க

ஏதுவாக மாத்திரம் இருக்கிறான். கம்யூனிஸ்ட் சமுதாயத் திலோ சேர்த்து வைக்கப்பட்ட தொழிற்சக்தி தொழி லாளியின் வாழ்க்கையை விசாலிக்கவும், செல்வாக்குறச் செய்யவும் உயர்த்தவும் சாதகமான ஏதுவாகவே யிருக் கிறது.

ஆகையால் பூர்ஷுவா சமூகத்தில் இறந்தகாலம் தற்காலத்தின் போக்கை நிர்ணயிக்கும் வலிமையுடைய தாகிறது. கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் தற்காலம் இறந்த காலத்திலும் பார்க்க வலிமையுள்ளதாகிறது. பூர்ஷுவா சமூகத்தில் மூலதனம் தனிமைகளற்றுத் தனித்தன்மை பெற்றுவர உயிர் உள்ள ஒருவன் தனித்தன்மை இழந்து சுதந்தரமற்றவனாகிறான்.

இவ்வித நிலையை யழிப்பதையே பூர்ஷுவாவர்க்கம் தனித்தன்மையையும் சுதந்திரத்தையும் அழிப்பதாகக் கூறு கின்றனர். அது சரியானதே. பூர்ஷுவாவினுடைய தனித் தன்மையையும், சுயாதீனத்தையும், சுதந்திரத்தையும் அழிப்பதே திடமான நோக்கமாகின்றது.

தற்காபூர்ஷுவா பொருள் உற்பத்தி நிலையில், தங்கு தடையற்ற வியாபாரமே - அதாவது கட்டுப்பாடின்றிக் கொள்முதல் விற்பனை செய்தலே - சுதந்திரமெனக் கருதப் படுகின்றது.

ஆனால் கொள்முதலும் விற்பனையும் மறைந்தால் அத்துடன் தங்குதடையற்ற கொள்முதலும் விற்பனை யும் மறைந்திடும். தங்குதடையற்ற கொள்முதல்விற்பனை ஆகியவற்றைப்பற்றி எங்கள் பூர்ஷுவாக்கள் பேசும் பேச்சுக்களும், சுதந்தரமென்பதைப்பற்றிப் பொதுவாக இவர்கள் பேச்சும் இவர்களுடைய ஏனைய "வீரப்பேச் சுக்களும்" ஓர் சந்தர்ப்பத்திலேயே ஏதாகிலும் ஓர் அர்த் தத்தைப் பெறுமிடம், அதாவது மத்திய காலத்தில் கட்

டுப் படுத்தப்பட்ட கொள்முதல் விற்பனை ஆகியவற்றுட னும், அக்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக ளுடனும் சீர்தூக்கிப் பார்க்கப்படும்போதே இப் பேச் சுக்களெல்லாம் அர்த்தம்பெற முடியும். ஆனால் (கம்யூ னிஸ்ட்சமுதாயத்தால் அழிக்கப்படும்) கொள்முதல், விற்பனை பூர்ஷுவா பொருள் உற்பத்தியின் இயலபு ஆகியவற்றை அழித்து முடித்த கம்யூனிஸ்ட் சமுதாயத்துடனும், பூர் ஷுவா வர்க்கத்தையே அழித்து முடித்த சமுதாய நிலையுட னும் சீர்தூக்கிப் பார்க்கும்போது இப் பேச்சுக்கள் அர்த்தமற்றதாகின்றன. தனிவுடைமைச் சொத்தை அழிக் கும் எங்கள் எண்ணத்தைக்கண்டு நீங்கள் திகலடைந்து விடுகிறீர்கள். ஆனால் உங்களிடையே இப்போதிருக்கும் சமூகத்தில் பத்தில் ஒன்பது விதம் உள்ள ஜனத்தொகை யினரைப் பொறுத்தவரையிற் சொத்து ஏற்கனவே பறிக் கப் பட்டு விட்டது. சமூகத்திலுள்ள இவ்வொன்பது விதத்தினர் கையிலும் இச்சொத்து இல்லாததுவே ஓர் சிலரின் கையில் இச் சொத்திருப்பதற்குப் பூரணகாரணம். ஆகவே சமுதாயத்தின் மாபெரும் பகுதியினரிடம் ஒருவித சொத்துமில்லாததையே இன்றியமையா அம்சமாகக் கொண்ட ஓர் சொத்துமுறையை நாங்கள் அழிக்கப் போ கிறோமென நீங்கள் பழிசுமத்துகிறீர்கள்.

சுருங்கக்கூறின் உங்கள் சொத்தை அழிப்பதற்காக எங்களைக் கண்டிக்கிறீர்கள். அது முற்றும் சரியே. அதையே நாங்கள் செய்யக் கருதுகிறோம்.

தொழிற் சக்தி மூலதனமாகவோ, அல்லது பணமா கவோ, அல்லது வாடகையாகவோ, அல்லது பிரத்தியேக சொந்தமாக்கக்கூடிய சமுதாய சக்தியாகவோ மாற்றப் படமுடியாத எஷணத்திலிருந்து - அதாவது தனிவுடை

மைச் சொத்து பூர்ஷுவா சொத்தாகிய மூலதனமாக மாற்றப்பட முடியாத அந்தக்ஷணத்திலிருந்து - மனிதனின் தனித்தன்மை இல்லாமற் போகிறதென நீங்கள் கூறுகிறீர்கள்.

ஆகையால் நீங்கள் "தனிப்பட்டவன்" என்பதால்பூர்ஷுவாவாகிய மத்திய வகுப்புச் சொத்துரிமைக்காரனையே கருதுகிறீர்கள் என்பதை ஒத்துக்கொள்ளல் வேண்டும். உண்மையில் இம் மனிதன் (பூர்ஷுவா) இனிமேல் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இல்லாமல் நீக்கப்பட்டு, இத்தன்மையுடன் வாழமுடியாத நிலை யேற்பட வேண்டும்.

சமுதாயத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தனதாக்கும் சக்தியை ஒருமனிதனிடமு மிருந்தும் கம்யூனிஸம் பறிக்கவில்லை. ஆனல் அப்படித் தனதாக்குவதால் மற்றவர்களுடைய உழைப்பைத் தன்னதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரும் சக்தியையே பறிக்கிறது.

தனிஉடைமைச் சொத்தை அழித்தவுடன் எல்லா வேலையும் நின்று உலகம் முழுவதையும் சோம்பல் பீடிக்குமென ஆக்ஷேபிக்கப்படுகிறது.

இவ் வாக்ஷேபனையின்படி வெறும் சோம்பலாலேயே பூர்ஷுவா சமூகம் எப்பொழுதோ நாசமாய்ப் போயிருக்கவேண்டும். ஏனென்றல் அச்சமூகத்தில் உழைப்போர் ஒன்றுமே பெறுவதில்லை. ஆனல் பலன் பெறுபவர் உழைப்பதில்லை. இவ் வாக்ஷேபனை முழுவதும் கூறியதை விளக்காது திரும்பவும் கூறுவதே. மூலதனமில்லாத போது கூலி உழைப்பும் இருக்க முடியாது என்ற கூற்றின் வேறு ரூபமே இவ்வாக்ஷேபனை.

கம்யூனிஸ்ட் முறைப்படி பொருட்களை உற்பத்தி செய்தற்கும் உற்பத்தியாக்கப்பட்ட பொருள்களை அதே முறைப்படி தனதாக்குவதற்கும் எதிராகச் செய்யப் படும் ஆட்சேபனைகள் எல்லாம் அறிவு வளர்ச்சியால் ஏற்படும் சிருஷ்டிகள் சம்பந்தமாகக் கம்யூனிஸம் கைக் கொள்ளும் முறைக் கெதிராகவும் செய்யப்பட்டன. எவ்விதம் வர்க்கச்சொத்தின் அழிவுடன் உற்பத்தியும் மறைந்து விடுகிறதெனப் பூர்ஷுவாவிற்குத் தோன்று கிறதோ அவ்விதமே வர்க்கக் கலாசாரத்தின் மறைவுடன் எல்லாக் கலாசாரமும் மறையுமென அவனுக்குத் தோற்று கிறது.

இழக்கின்றேனே என்று அவன் மனம் வருந்தும் கலாசாரம் மாபெருந்தொகையினருக்கு யந்திரம்போல் இயங்கும் பயிற்சியை மாத்திரம் கொடுத்தலாகின்றது.

பூர்ஷுவாவினுடைய சொத்தை அழிக்கும் எங்கள் விருப்பத்தை அளப்பதற்கு, சுதந்திரம், கலை, சட்டம் என்பவற்றைப்பற்றி பூர்ஷுவா வைத்திருக்கும் அபிப் பிராயங்களை அளவு கோலாக நீங்கள் பாவிக்கும் வரைக் கும் நீங்கள் எங்களுடன் வாதம் செய்யாதீர்கள்.

உங்கள் கருத்துக்கள், பூர்ஷுவா சொத்து, பூர் ஷுவா பொருள் உற்பத்திமுறை ஆகியவற்றிற்கு வேண் டிய நிலைகளிலிருந்து எழுந்த கருத்துக்களேயல்லாமல் வேறென்றுமல்ல. மேலும் உங்கள் வர்க்கத்தின் விருப் பம் எல்லோருக்கும் சட்டமாக்கப்பட்டது. இவ்விருப் பத்தின் உண்மை இயல்பும் போக்கும் உங்கள் வர்க் கம் நிலைப்பதற்கு ஏற்ற பொருளாதார சூழ்நிலையால் நிர் ணயிக்கப்பட்டது. இவ்விருப்பமே உங்கள் நீதி சாஸ் திரமாகின்றது.

உங்களுக்கும், உங்களுக்கு முந்திய ஓவ்வோர் ஆளும்வர்க்கத்திற்கும் பொதுவான ஓர் தப்பபிப்பிராயம் உண்டு. பொருள் உற்பத்தி செய்வதற்கு நீங்கள் ஏற்படுத்திய இன்றைய முறையிலிருந்தும், தற்போது நிலவுகின்ற சொத்துரிமை முறையிலிருந்தும் கிளம்பிய சமூதாய முறைகளே - அதாவது பொருள் உற்பத்தியின் வளர்ச்சியின்போது சரித்திரபூர்வமாகத் தோன்றிமறையும் தொடர்புகளே - என்றென்றைக்குமுள்ள இயற்கைச் சட்டங்கள், நியாயச் சட்டங்களென மாற்றச் செய்யும் சுயநலத்தன்மை வாய்ந்த தப்பபிப்பிராயமே அது. புராதன காலச் சொத்தைப்பற்றி நீங்கள் தெளிவாக அறிந்த உண்மைகளே, நிலப்பிரபுத்வத்தை முறையிலுள்ள சொத்தைப்பற்றி நீங்கள் ஏற்றுக்கொண்ட உண்மைகளே உங்களது பூர்ஷுவா சொத்து முறைசம்பந்தமாக நீங்கள் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதுதான்.

அடுத்தபடியாக, குடும்பத்தை அழிக்கப்போகின்றார்களென்ற பிரச்னைக்கு வருவோம். தீவிர முற்போக்காளர் கூடக் கம்யூனிஸ்ட்டுகளின் கேவலமான இந்நோக்கத்திற்கு எதிராகச் சீறி எழுகிறார்கள்.

இன்றைய குடும்பம் - அதாவது பூர்ஷுவா குடும்பம் என்ன அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது? மூலதனத்தின்மேலும் தனிப்பட்டவரின் லாபத்தின் மேலும்தான் கட்டப்பட்டிருக்கிறது. இக் குடும்பமுறை பூரணவளர்ச்சியுடன் தோற்றுவது பூர்ஷுவா வர்க்கத்தினிடையேயே. இவ்வித வளர்ச்சியடைந்த குடும்ப முறையுடன் இணைந்து இன்னேர்நிலையிருக்கிறது. புரோலிட்டேரியட்டுகளிடையே இக்குடும்பமுறை ஏறக்குறைய இல்லாததும் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விபசார முறையுமே இந்நிலை.

மேற்கூறிய இரண்டாவது நிலை மறையும்போது கண்டிப்பாகவே பூர்ஷுவா குடும்ப முறையும்தானாகவே மறையும். இவ்விரண்டும் மூலதனம் மறையும்போது தான் மறையும்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சுரண்டுவதை நிறுத்த விரும்புகிறோம் என எங்களைக் குற்றம் சாட்டு கிறீர்களா? இக் குற்றத்திற்கு நாங்கள் பாதிரவாழிக லென ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால் நாங்கள் வீட்டுக் கல்விக்குப் பதிலாகச் சமூகக் கல்வியை ஏற்படுத்தும்போது எல்லாவற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்ட தொடர்பை அழிக்கிறோமென்று நீங்கள் சொல்வீர்கள்.

உங்கள் கல்விகள் என்னே? சமுதாயத்தின் நேரான அல்லது மறைமுகமான தலையீட்டினாலும், பள்ளிக்கூடங் கள் மூலம் நீங்கள் கல்விகற்பிக்கும் பொழுதுள்ள சமு தாய நிலைகளாலும் உங்கள் கல்விமுறை நிர்ணயிக்கப் பட்டுச் சமூகக்கல்வியாகவில்லையா? கல்வியில் சமூகத் தின் தலையீட்டைக் கம்யூனிஸ்டுகள் புதிதாகப் புகுத்த வில்லை. அத்தலையீட்டின் தன்மையை மாற்றுவதற்கும் அதிகார வர்க்கத்தின் செல்வாக்கிலிருந்தும் கல்வியை மீட்கவுமே அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

குடும்பம், கல்வி, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே நிலவிய பரிசுத்தமாக்கப்பட்ட பரஸ்பர தொடர்பு ஆகிய வற்றைப்பற்றிப் பூர்ஷுவாக்கள் பேசும் அர்த்தமற்ற பேச்சுக்கள் தற்கால யந்திரசாதன உற்பத்தி முறையில் ஏற்படும் நடைமுறையால் இன்னும் அதிகமாக வெறுக் கத் தக்கதாகின்றன; ஏனெனில் புரோலிட்டேரியட்டுக

விடையே உள்ள குடும்பத் தொடர்புகளெல்லாம் அறுக்கப்பட்டு அவர்களுடைய பிள்ளைகள் சாதாரண வியாபாரப் பொருட்களாகவும் தொழிற்கருவிகளாகவும் மாற்றப்படுகின்றனர்.

ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள் பெண்களையும் பொதுச்சொத்தாக்குவீர்களென பூர்ஷுவா வர்க்கம் முழுவதும் எகோபித்து உழறுகிறது.

பூர்ஷுவா தன்மனைவியை ஒரு உற்பத்திக்கேதுவான ஒரு வெறும் சாதனமென்றே கருதுகிறான். உற்பத்திச்சாதனங்கள் எல்லாம் சமூகத்திலுள்ள எல்லாராலும் உபயோகிக்கப்படும் என்று பூர்ஷுவா கேள்விப்படுகிறான். உடனே பொதுவாக மற்றெல்லாப் பொருள்கட்கு நேரும் கதியைப்போலவே பெண்களுக்கும் நேரிடுமென்னும் முடிவுக்கு வருவதைத்தவிர வேறுமுடிவுக்கு அவனால் வரமுடியாது.

பெண்கள் உற்பத்திக்கு எதுவான யந்திரங்களாகவே கருதப்படும் அவர்கள் அந்தஸ்தை இல்லாமல் செய்வதே உண்மையான நோக்கமென்பதைப் பூர்ஷுவா கனவிலும் காண்பதில்லை.

தனிரப் பெண்களைப் பொதுச்சொத்தாக்குதல் பகிரங்கமாகவும், அதிகாரபூர்வமாகவும் கம்யூனிஷ்டுகளால் எற்படுத்தப்படுமெனப் பூர்ஷுவாக்கள் பாசாங்குசெய்து தர்மத்தின்பேரால் அவர்கள் காட்டும் சிரத்தையைப்போல கேலிக்கிடமானது எதுவும் கிடையாது. பெண்களைப் பொதுச்சொத்தாக்குதல் என்னும் முறையைக் கம்யூனிஸ்டுகள் புகுத்தவேண்டிய அவசியமில்லை; பண்டைக்காலம் தொடங்கியே எற்படுத்தப்பட்டிருக்கிறது.

எங்கள் பூர்ஷ்வாக்கள் பொதுவிபசாரிகளையும், தங்கள் புரோலிட்டேரியட்டுகளுடைய மனைவிகளையும் பெண்களையும் தங்கள் தேவைக்கு எற்பப்பெறுவதோடு திருப்திப்படாது, ஒருவர் மற்றவருடைய மனைவியை கற்பு நெறியிலின்று விலகச்செய்வதில் மிகவும் ஆனந்தம் பெறுகின்றனர்.

பூர்ஷ்வாக்களின் விவாகம்: உண்மையில் பொதுவில் மனைவிகளை வைத்திருக்கும் ஒரு முறையே. ஆதலால் கபடமாக மறைக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக, பகிரங்கமாக, சட்டபூர்வமாக்கப்பட்ட பெண்களைப்பொதுவாக்கும் முறையைப் புகுத்துவதற்கு கம்யூனிஸ்டுகள் விரும்புகிறார்களெனக் குற்றம் சாட்டப்படலாம். தவிர, தற்கால உற்பத்திமுறையை அழித்தலோடு அம்முறையிலிருந்து எழுந்த பெண்களைப் பொதுவாக வைத்திருக்கும் முறையும் அழிக்கப்படுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலாகின்றது: அதாவது பகிரங்கமாகவும், இரகசியமாகவும் நடத்தப்பட்ட விபசாரமுறை அழிக்கப்படுகிறது.

தேசங்களையும், தேசீயத் தன்மையையும் கம்யூனிஸ்டுகள் அழிக்க விரும்புவதாக இன்னோர் குற்றம் அவர்கள்மேல் சுமத்தப்படுகிறது.

தொழிலாளர்களுக்குத் தேசம் சொந்தமாக இல்லை. நாங்கள் அவர்களிடமிலாத ஒன்றை அவர்களிடமிருந்து எடுக்கமுடியாது. எல்லாவற்றிற்கும் முன் புரோலிட்டேரியட்டுகள் அரசியல் அதிகாரம் பெறவேண்டி இருப்பதாலும் ஓர் தேசத்தின் முன்னணியிலிருக்கும் வர்க்கமாகத் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டியிருப்பதாலும், உண்மையில் தன்னையே ஓர் தேசீய இனமாக்க வேண்டுவதாலும் அந்த அளவிற்குத் தேசியத்தன்மை பெற்றிருக்

கிறது. ஆனால் தேசீயத்தன்மை என்பதின் இக்கருத்துக்கும், பூர்ஷுவாக்கள் அப்பதத்திற்குக் கொடுக்கும் கருத்திற்கும் தொடர்பே கிடையாது.

பூர்ஷுவாக்களுடைய அபிவிருத்தியாலும், தங்கு தடையற்ற வியாபாரத்தாலும், உலக முழுவதும் ஒரே மார்க்கெட் ஆனதாலும் உற்பத்தியில் ஒரே வழிமுறையின் ஒரேதன்மை எற்பட்டதாலும், இந் நிலைகளுக்கேற்ற ஜீவிய மாற்றங்களாலும் மக்களிடையே தேசீய வேற்றுமைகளும், விரோதங்களும் நாளுக்குநாள் அதிகம் அதிகமாக மறைகின்றன.

புரோலிட்டேரியட்டின் ஆதிக்கம் அப்பகைகளை மேலும் இன்னும் சீக்கிரமாக அழித்துவிடும். புரோலிட் டேரியட்டின் அடிமைத்தனைகளைத் தரித்தெறிவதற்கு முக்கியமான ஓர் அம்சம் தேவைப்படுகிறது. வளர்ச்சியுற்ற சில நாகரீக நாடுகளாகிலும் ஒன்றுபட்டு உழைப்பதே இவ்வம்சம்.

ஒருவன் ஒருவனைச் சுரண்டுதல் எவ்வளவிற்கு அதிகப் படுகின்றதோ, அவ்வளவிற்கு ஓர் தேசத்தை இன்னோர் தேசம் சுரண்டுவதும் முடிவடையும். ஒரு தேசத்திலுள்ள வர்க்கங்களிடையே எற்படும் பகைமை முடிவடையும் விகிதத்தில் தேசங்களுக்கிடையே எற்படும் பகைமையும் அற்றுப்போகும்.

சமயம், வேதாந்தம், மனோதத்வம் ஆகிய துறைகளிலிருந்து கம்யூனிஸத்திற்கு எதிராகக் கொண்டு வரப்படும் குற்றச்சாட்டுகளை ஆராய்வதை அலசிப் பார்ப்பதற்கு அவசியமில்லை.

மனிதனுடைய லோகாயத வாழ்க்கையிலும் சமூகத் தொடர்புகளிலும், சமுதாய வாழ்க்கையிலும்

ஏற்படும் ஒவ்வொரு மாற்றத்துடனும் மனித னுடைய எண்ணங்கள் கொள்கைகள் கோட்பாடுகள் - சுருங்கக்கூறின் மனிதனுடைய அறிவு உணர்ச்சி - மாறு கின்றன என்பதை விளக்குவதற்கு ஆழமான அறிவாற் றல் தேவைப்படுகிறதில்லை.

ஐடப்பொருள் உற்பத்தி மாறும் விகிதத்தில் அறிவு உற்பத்தியும் தன் தன்மையில் மாறுகிறதென்பதைவிட வேறு எந்த உண்மையை எண்ண வளர்ச்சியின் சரித்திரம் நிரூபப்படுத்துகிறது? ஒவ்வொரு காலத்திலும் செல்வாக் குப் பெற்ற எண்ணங்கள் எப்போதும் அக்காலத்திலுள்ள அதிகார வர்க்கத்துடைய எண்ணங்களாயிருந்திருக்கின் றன.

சமூகத்தைப் புரட்சிகரமாக மாற்றும் எண்ணக்க ளேப்பற்றி ஜனங்கள் பேசும்போது. பழைய சமூகத்திற் குள்ளேயே புதுச் சமூகத்தின் விதைகள் உருவெடுக் கின்றன வென்பதையும் பழைய வாழ்க்கை நிலையின் சூலிவிற்கு ஏற்பப் பழைய எண்ணங்களின் சூலிவு ஏற படுகின்றது என்ற உண்மையையுமே விளக்குகிறார்கள்.

ஆதிகால உலகம் தன் அந்தியகால வேதனையிலிருக் கும் போது பழைய சமயங்கள் எல்லாம், கிறீஸ்து சம யத்தால் வெறறிகொள்ளப்பட்டது. பதினெட்டாம நூற்றாண்டில் தற்காலியான எண்ணங்களுக்கு கிறீஸ்தவ சமயம் தலைகுனிந்தபோது அக்காலத்தில புரட்சிகரமான தன்மையைப் பெற்றிருந்த பூர்ஷுவா வர்க்கத்துடன் பிரபுத்வ சமுதாயம் தனது இறுதிப் போரை நடாத்தியது. சமயசுதந்திரம், மனச்சாட்சி சுதந்திரம் ஆகிய எண்ணங் கள் அறிவுமண்டலத்திற்குள் ளும் தங்குதடையற்ற

போட்டி நிலவவேண்டுமென்ற எண்ணத்தையே விளக்கின.

சரித்திரவளர்ச்சியின் போக்கில் சமய, தர்மீக வேதாந்த, நீதிசாஸ்திர கோட்பாடுகள் சந்தேகமில்லாமலே திருத்தியமைக்கப்பட்டன; அப்படி இருந்தபோதிலும் தர்மீகமுறை, வேதாந்தம், அரசியல் சாஸ்திரம், சட்டம் ஆதியன இம் மாற்றங்களுக்கெல்லாம் தப்பி நிலைத்திருக்கின்றனவே என்று கூறப்படுகின்றன.

இதோடுபின்வருமாறு சிலர்கூறுகின்றார்கள்.சுதந்திரம், நீதி என்பனபோன்ற அழியா உண்மைகள் எல்லாச் சமூகநிலைகளுக்கும் பொதுவாக உள்ளன. ஆனால் இவ் அழியா உண்மைகளையும், சமயம் முழுவதையும் தர்மீக முறையையும், ஓர் புதிய அடிப்படையில் அமைக்காது அவைகளைக் கம்யூனிஸம் அழிக்கின்றதே. ஆகையால் இதுகாறும் கிடைக்கப்பெற்ற சரித்திர அனுபவம் முழுவதற்கும் மாறுகக் கம்யூனிஸம் நடக்கிறதே!

இக்குற்றச்சாட்டின் அர்த்தமென்ன? பழைய சமூகத்தின் சரித்திரம் முழுவதும் வர்க்கப் பகைகளின் வளர்ச்சியையும் காலத்திற்குக்காலம் இவ் விரோதங்கள் எடுத்த வெவ்வேறு ரூபங்களையுமே கொண்டுள்ளது.

என்னென்ன உருவங்களை இவ்விரோதங்கள் எடுத்தாலும் கடந்த காலங்களுக்கெல்லாம் ஒரு உண்மை பொதுவாக விருந்தது. சமூகத்தின் ஒருபகுதி பழுதும் பகுதிகளைச் சுரண்டுவதே இவ் உண்மை. ஆகையால் சென்ற காலங்களில் உள்ள சமுதாய சம்பந்தமான உணர்ச்சி பலவித வித்தியாசங்களைக் காண்பித்தாலும்,சிலபொதுவான ரூபங்களுக்குள் அல்லது சில பொதுவான கோட்பாடுகளுக்குள்ளேயே கட்டுப்பட்டு வளர்ந்திருக்கிறது; இவ்

ரூபங்களும் கோட்பாடுகளும் வர்க்கப்பகையின் சம்பூர்ண மறைவுடனல்லாமல் வேறுவிதமாக அழிக்கப்படமாட்டா. இது ஓர் அதிசயமன்று.

பரம்பரையாக இருந்த சொத்துத் தொடர்புகளி லிருந்து சமுதாயத்தை முற்றுகப் பிரிப்பதே கம்யூனிஸ்ட் புரட்சியாகும். இப்புரட்சியின வளர்ச்சி பரம்பரையாக வுள்ள எண்ணங்களில் ஒருபோதுமில்லாத மாற்றத்தை யும் அவசியமாக்குவது நூதனமல்ல.

கம்யூனிஸத்திற்கு எதிராகப் பூர்ஷுவா வர்க்கம் எழுப்பும் ஆக்ஷேபனைகளை இனி விடுவோம்.

தொழிலாளிவர்க்கம் எற்படுத்த வேண்டிய புரட்சி யின் முதற்படி புரோலிட்டேரியட்டை அதிகாரவர்க்க மாக உயர்த்தி ஜனநாயகப் போராட்டத்தை வெல்வது என்பதே நாங்கள் மேலே அறிந்தோம்

புரோலிட்டேரியட் இவ் அரசியல் அதிகாரத்தைப் பாவித்து எல்லா மூலதனத்தையும் பூர்ஷுவாவிடமிருந்து கைப்பற்றும் எல்லா உற்பத்தி சாதனங்களையும் ஓர் மத் திய அதிகாரத்தின் கீழ்ப்படுத்தி, அதிகாரவர்க்கமாக அமைக்கப்பட்ட புரோலிட்டேரியட்டின் கையில், அதா வது அரசாங்கத்தின் கையில் கொடுக்கும்; மேலும் உற்பத்திச் சக்திகளின் தொகையைக் கூடிய சீக்கிரத் தில் அதிகரிக்க முயற்சிக்கும்.

முதலில், தனிப்பட்ட சொத்துரிமைகளிலும், பூர் ஷுவா பொருள் உற்பத்தி முறைகளிலும் யதேச்சாதி காரமாகத் தலையிடாமல் வேறு வழிகளால் இதைச் சாதிக்க முடியாது. ஆகையால் இவ்வழிவகைகள் பொருளாதார ரீதியில் போதாதனவாயும் சாத்தியமற்றன வாயும் தோன்றினும் சரித்திரப்போக்கில் இவைகள் தங்களின் தொடக்க எல்லைகளை மீறிப் பழைய சமுதாய

முறையில் இன்னும் தீவிரமாகத் தலையிட வேண்டி வருகிறது. மேலும் இவை பொருள் உற்பத்தி முறையைப் புரட்சிகரமாக மாற்றி அமைப்பதற்குத் தவிர்க்க முடியாத முறைகளாகின்றன.

இவ்வழிவகைகள் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறுகத்தான் இருக்கும்.

ஆகிலும் மிகவும் முன்னேற்றமடைந்த தேசங்களில் கீழ்க்காண்பவை பொதுவாகப் பொருந்தும்.

1. நிலச்சொத்து முறையை அழித்து நிலக்குத்தகை எல்லாவற்றையும் பொது நோக்கங்களுக்குப் பாவித்தல்.

2. உயர்ந்தவருமானங்களில், படிப்படியாக உயர்ந்துவரும் வருமான வரிபோடல்.

3. சகலவிதமான பரம்பரைச் சொத்துரிமை முறையை அழித்தல்.

4. பரதேசம் செல்லுவோர், கலகம் விளைவிப்போர் ஆகியவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்.

5. அரசாங்க மூலதனத்துடன், அரசாங்கத்தின் ஏகபோக உரிமையாகத் தேசீயப் பாங்கை ஏற்படுத்திக் கடன் கொடுக்கல் வாங்கலை அரசாங்கத்திடமேயே வைத்து ஒரே அதிகாரத்துக்குட்படுத்தல்.

6. போக்குவரத்துச் சாதனங்களை ஒரே அதிகாரத்திற் குட்படுத்தி அரசாங்கத்தின்கீழ் வைத்தல்.

7. அரசாங்கத்தால் நடாத்தப்படும் தொழிற்சாலைகளையும், உற்பத்திச் சாதனங்களையும் பெருக்குதல். ஒரு பொதுவான திட்டத்தின்படி தரிசாகக் கிடக்கும் நிலங்களில் பயிர்ச்செய்கை செய்வதும், பொதுவாகப் பூமியைச் சீர்ப்படுத்துவதும்.

8. சகலரும் சமமாக வேலைசெய்யவேண்டுமெனக் கட்டுப்படுத்துதல்; தொழிற்பட்டாளங்களை முக்கியமாக விவசாயத்திற்காக ஏற்படுத்தல்.

9. விவசாயத்தையும், யந்திரசாதன உற்பத்தித் தொழிலையும் ஒன்று சேர்த்தல்: தேசம் முழுவதும் ஜனத்தொகையைச் சமமாகப் பரப்புவதின் மூலம் நகரத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசங்களைப் படிப்படியாக இல்லாது செய்தல்.

10. பொதுப் பள்ளிக்கூடங்களில் எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்வி அளித்தல், குழந்தைகள் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தற்போதைய முறையை அழித்தல், கல்வியையும், யந்திரசாதனப் பொருள் உற்பத்தியையும் இணைத்தல்.

சரித்திரப்போக்கில், வர்க்கவித்தியாசங்கள் மறைந்து தேசமுழுவதும் ஒரு பெரும் சங்கமாய்ச் சேர்ந்து எல்லாப் பொருள் உற்பத்தியையும் தானே நடத்தும்போது, பொது வேலைக்காக அமைக்கப்பட்ட அதிகாரம் தனது அரசியல் அம்சத்தை இழந்துவிடும். உண்மையில் அரசியல் அதிகாரமென்பது ஒரு வர்க்கம் மற்ற வர்க்கத்தை அடக்குவதற்கு ஸ்தாபித்த அதிகாரமேயாகும். பூர்ஷுவா வர்க்கத்துடன் நடத்தும் போராட்டத்தில் புரோலிட் டேரியட் சூழ்நிலையின் காரணத்தால் தன்னை ஒரு வர்க்கமாக அமைக்கவேண்டி வருகிறது; பின்பு ஒரு புரட்சியின் மூலம் அது தன்னையே அதிகார வர்க்கமாக்குகிறது. இதனுடன் பழைய உற்பத்தி முறைகளைப் பலாத்காரமாக அகற்றி விடுகிறது. இவை எல்லாவற்றையும் செய்வதால் வர்க்கவித்தியாசங்களிருப்பதற்கு ஏதுவான நிலைமைகளையும் - இல்லை, பொதுவாக வர்க்கங்களையுமே — புரோலிட்டேரியட் அகற்றிவிடும். எனவே தான்பெற்ற அதிகாரத்தையுமே புரோலிட்டேரியட் வர்க்கம் இறுதியில் அகற்றிவிடும்.

அனேக வர்க்கங்களும், வர்க்கப் பகைமையும்

நிறைந்த பழைய பூர்ஷுவா சமுதாயத்திற்குப் பதிலாக ஓர் சமூகம் ஏற்படும். அதில் எல்லோருடைய பூரண வளர்ச்சிக்கும் ஒவ்வொருவருடைய பூரணவளர்ச்சியும் இன்றியமையாத அவசியமாகும்.

III

சோஷலிஸ்ற் கம்யூனிஸ்ற் நூல்கள்.

1. பிற்போக்கான சோஷலிஸம்.

(அ) நிலப்பிரபுத்வ சோஷலிஸம்.

சரித்திர பூர்வமாக ஏற்பட்ட தங்கள் நிலையினால் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய தேசங்களிலுள்ள பிரபுக்கள் தற்கால பூர்ஷுவா சமூகத்தைக் கண்டித்துப் பிரசுரங்கள் எழுதுவதைத் தங்கள் தொழிலாக்கியிருக்கிறார்கள். 1830-ம் வருடம் ஜூலை மாதம் நடந்த பிரஞ்சுப் புரட்சியின்போதும், இங்கிலாந்தில் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக நடந்த கிளர்ச்சியின்போதும், இந்நிலப் பிரபுக்கள் தாங்கள் தான்தோன்றிகளென வெறுத்த பூர்ஷுவாக்களிடம் திரும்பவும் சரண்புகுந்தார்கள். அக்காலந்தொடக்கம் இவ்விரு சாராருக்குமிடையே பிரபலமான அரசியல் போராட்டமெதுவும் ஏற்படமுடியாது இருந்தது. ஆனால் தர்க்க மூலம் நடத்தும்போராட்டம் மாத்திரம் சாத்தியமாயிருந்தது. பழைய அரசவம்சம் திரும்பியாண்ட காலத்துக்கூற்றுகள் கூட இப்போராட்டத்தில் பாவிக்க முடியாது இருந்தது. (அரசவம்சம் திரும்பவும் பிரான்ஸை ஆண்டகாலம் 1814 — 1830)

இந்நிலப் பிரபுக்கள் அனுதாபத்தைப் பெறுவதற்காக தங்கள் நலங்களை வெளிப பார்வைக்கு மறைத்துச் சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களையே அடிப்படையாகக்கொண்டு பூர்ஷுவாவர்க்கத்துக்கு எதிராகத் தன் கண்டனப் பிரசாரத்தை நடத்துகிறார்கள். இவ்வாறு தங்கள் புதிய எஜமானர்கள்மேல் வசைமாரி கூப்பாடுவதாலும், வரப்போகும் பெரும் வீழ்ச்சியைப் பற்றப் பயங்கரமான ஜோதிஷத்தை அவர்களுக்கு இரகசியமாகக் கூறுவதாலும் பிரபுத்வ வர்க்கம் அவர்கள் மேல் உள்ள தனது பகைமையைத் தீர்த்துக் கொள்ளுகின்றது.

இவ் வழியாகவே நிலப்பிரபுத்வ சோஷலிஸம் கிளம்பியது. இதன்தன்மை: பாதி புலம்பலும் பாதி வசைமாரியுமே. ஓர் விதத்தில் இறந்தகாலத்தின் பிரதிபிம்பமாகவும், இன்னோர் விதத்தில் எதிர்காலம் கொண்டுவரும் அபாயமாகவும் அது தோன்றுகிறது. தீவிரமான, யுகமான, காரமான கண்டனத்திலல் பூர்ஷுவாவர்க்கத்தின் உயிர்நிலையை சில வேளைகளில் அது தாக்குகிறது. ஆனல் தற்காலச் சரித்திரப் போக்கை ஓர் அளவேனும விளக்க முடியாத நிலையால் அது எப்போதும் கேலிக்கிடமான பலனையே அடைகிறது.

ஜனங்களைத் தன்பக்கம் சேர்ப்பதற்காக புரோலிட்டேரியட்டுடைய பிச்சைப்பாத்திரத்தை தன்கொடியாக நிலப் பிரபுத்வவர்க்கம் தன்முன் நாட்டுகிறது. ஆனல் ஜனங்கள் அவ்வர்க்கத்தின் பக்கத்தைச் சேர்ந்தவுடன் அதன் பின்னணியில் இருக்கும் அவ்வர்க்கத்தின் உண்மைக்கொடியான பழய நிலப்பிரபுத்வ ஆயுதச்சின்னக் கொடியைக் காண்கின்றனர். உடனே அவ்வர்க்கத்தைக் கேலிசெய்யும் விதமாகநகைத்து அவ்வர்க்கத்தை விட்டு ஓடுகிறார்கள்.

"பிரஞ்ச் லெஜிற்றிமிஸ்ற்" களின் ஒருபகுதியும் "யங் இங்லண்ட்"டில் ஒரு பகுதியும் மேற்குறித்த காட்சியை அளித்தன.

தாங்கள் சுரண்டும் முறை பூர்ஷுவா வர்க்கத்தினுடைய முறையினின்றும் வேறுபட்டதென்பதைச் சுட்டிக் காட்டும்போது நிலப்பிரபுத்வவாதிகள் ஓர் விஷயத்தை மறக்கின்றனர்; அதாவது தாங்கள் சுரண்டும்போது இருந்த சூழ்நிலைகள் வேறுபட்டன என்பதையும் இப்போ உபயோகிக்க முடியாது பழைமை அடைந்து விட்டன என்பதையும் மறந்துவிடுகிறார்கள். தங்கள் ஆட்சியின்கீழ் தற்காலத்துப் புரோலிட்டேரியட்வர்க்கம் ஒருபோதும் இருக்கவில்லையென்பதை அவர்கள் எடுத்துக் காட்டும்போது தற்கால பூர்ஷுவா வர்க்கம் தங்களது உற்பத்தி சொந்தமான சமூக முறையில் தவிர்க்கமுடியாது தோன்றிய வழித்தோன்றல் என்பதை மறக்கின்றார்கள்.

தவிர, தங்கள் கண்டனங்களின் பிற்போக்கான தன்மையைச் சிறிதுகூட மறையாது பூர்ஷுவா வர்க்கத்தினமேல் அவர்கள் சுமத்தும் முக்கிய குற்றச்சாட்டு என்னவாகிறது என்பதைப் பார்ப்போம். பழைய சமூக முறையை அடியோடு வேரறுக்கும் கடமையைப்பெற்ற ஓர் வர்க்கம் பூர்ஷுவா ஆட்சியின்கீழ் வளர்ச்சியடைகின்றனதென்பதே அது.

அவர்கள் பூர்ஷுவா வர்க்கத்தைக் கண்டிப்பது புரோலிட்டேரியட் வர்க்கத்தை உண்டுபண்ணுவதற்காகவல்ல; **புரட்சிகரமான** புரோலிட்டேரியட்டை உண்டுபண்ணுவதற்காகவே இக்கண்டனம்.

ஆகையால் அரசியலில் அவர்கள் தொழிலாளிவர்க்கத்தைப் பலாத்காரமாக அடக்கும் முறைகள் எல்லா

வற்றிலும் சேர்ந்து கொள்கிறார்கள்; தங்களுடைய உலனத லகூயப் பேச்சுக்களுக்கு மாறுகச் சாதாரண வாழ்க்கையில் யந்திரசாதன உற்பத்திமுறையென்னும் மாத்தினின்றும் கிழுகின்ற பொற்பழங்களே எடுக்கிறார்கள்; மேலும் உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றைப் பண்டமாற்றுகக் கொடுத்து, கம்பளி, சீனி, குடிலகை ஆகிய வியாபாரப் பொருட்களைப் பெற்று வியாபாரம் செய்து தங்களைத் தாழ்த்துகிறார்கள்.

நிலப்பிரபுவுடன் குருவானவர் எவ்விதம் ஒன்றுபடுகிறாரோ அப்படியே மதசோஷலிஸம், நிலப்பிரபுத்வ சோஷலிஸத்துடன் ஒருமைப்படுகிறது.

கிறீஸ்தவ சந்நியாஸத்திற்குச் சோஷலிஸ்ட் அச்சத்தைக் கொடுப்பதைவிடச் சுகமான விஷயம் வேறுண்டில்லை. தனிப்பட்ட சொத்துரிமை, விவாகம், அரசாங்கம், ஆகியவற்றிற்கு எதிராகக் கிறீஸ்தசமயம் உத்வேகப் பிரசங்கங்கள் செய்யவில்லையா? இவைகளுக்குப் பதிலாக தர்மம், வறுமை, பிரம்மசாரியம், தபசிஜல் உடம்பை வாட்டல், சந்நியாச வாழ்க்கை, கோவில் முதலியவற்றை அவசியமெனப் போதிக்கவில்லையா? நிலப்பிரபுவினுடைய இருதயத் துடிப்பை மாற்றி அவனை ஓர் குரு பரிசுத்தமாக்குவதற்கு எதுவான தீர்த்தம் போலவே கிறீஸ்தவ சோஷலிஸமிருக்கிறது.

(ஆ) குட்டி பூர்ஷுவா சோஷலிஸம்

பூர்ஷுவா வர்க்கத்தால் வீழ்த்தப்பட்ட வர்க்கம்—அதாவது தனது வாழ்க்கைக்கு எதுவான நிலைமைகள் குன்றித் தற்கால பூர்ஷுவா சமுதாயத்தின் சூழ்நிலையில்

அமிழ்ந்திய வர்க்கப் — நிலப்பிரபுத்வவர்க்கம் மாத்திர மல்ல. மத்தியதரைச் சிறு வியாபாரிகளும், சிறு விவசாய நிலச்சொந்தக்காரர்களுமே தற்கால பூர்ஷுவா வர்க்கத் தின் முதல் தோற்றங்கள். யந்திரசாதன உற்பத்தியிலும் வியாபாரத்திலும் நன்முக விர்த்தியடையாத தேசங்களில் இன்னும் இவ்விரண்டு வர்க்கங்களும் வளர்கின்ற பூர் ஷுவா வர்க்கத்தின் பக்கத்தில் ஸ்தப்பித்து நிற்கின்றன.

தற்கால நாகரீகம் பூரணவளர்ச்சிபெற்ற தேசங்க ளில் ஒரு புதிய குட்டி பூர்ஷுவாவர்க்கம் தோன்று கிறது. அது பூர்ஷுவா வர்க்கத்திற்கும் புரோலிட்டேரி யட் வர்க்கத்திற்கும் நடுவில் ஊசலாடிக்கொண்டு பூர் ஷுவா வர்க்கத்திற்குப் புதிய முதலாளிகளைக் கொடுக் கும் ஓர் பகுதியாகத் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே யிருக்கிறது. ஆனல் இவ் வர்க்கத்தில் உள்ள தனிப்பட்ட வர்கள் போட்டியின் போக்கால் திருப்பமும் புரோலிட் டேரியட் வர்க்கத்தக்குள் விழுத்தப்படுகின்றனர். மேலும் தற்கால யந்திரசாதன உற்பத்தி வளரவளர இவர்கள் தற்கால சமுதாயத்தின் ஓர் சுதந்திரமான பகுதியாக இல்லாது முற்முக அழியும் காலம் வருகிறதையும், கைத் தொழில் வியாபாரம் விவசாயம் ஆகியவற்றில் மேற் பார்வையாளராலும் கங்காணிகளாலும் கடைக்காரரா லும் அகற்றப்படுகின்றதையும் கூட அவர்கள் காண்கின் றனர்.

ஐரோப்பாவில் பாதிக்குமேல் விவசாயிகளாக உள்ள தேசங்களில், — உதாரணமாகப் பிரான்ஸ் போன்ற தேசங்களில் — புரோலிட்டேரியட்டுக்குச் சார் பாகவும் பூர்ஷுவா வர்க்கத்திற்கு எதிராகவும் இருந்த எழுத்தாளர்கள் பின்வரும் தன்மைகள் உள்ளவர்களாக

இருந்தார்கள். பூர்ஷுவா ஆட்சியைக் கண்டிக்கும் போது விவசாயி, குட்டி பூர்ஷுவா ஆகியவர்களுடைய கோட்பாடுகளையே இவர்கள் உபயோகித்தார்கள். இவ் விடைத்தர வர்க்கங்களின் மனோநிலையிலிருந்து தொழிலாளி வர்க்கத்திற்குச் சார்பாக அவர்கள் போராடினர்கள். இவ்வெழுத்தாளர்கள் இவ்விதம் செய்தது இயலபானதே. இவ்விதமே குட்டி பூர்ஷுவா சோஷலிஸம் எழுந்தது. பிரான்சிலும், இங்கிலாந்திலும், 'சிஸ்மோண்டி' என்பவர் இக் கூட்டத்தின் தலைவராக இருந்தார்.

தற்கால உற்பத்தி முறையிலுள்ள முரண்பாடுகளை மிகவும் நுணுக்கமாக இக்கூட்டத்தினர் துருவி ஆராய்ந்தார்கள். அவர்கள் பொருளாதார நிபுணர்களுடைய கபடமான சாக்குப் போக்குகளை அம்பலப்படுத்தினர். யந்திரத்தினாலும், தொழிற்பிரிவினாலும் ஏற்பட்ட அபாயகரமான பிளவுகளை மறுக்க முடியாத விதமாக இவர்கள் நிரூபித்தார்கள். மேலும் மூலதனமும் நிலமும் ஒரு சிலருடைய கையில் போய் அடைவதையும், கிராக்கிக்கு மிஞ்சிய பொருள் உற்பத்தி, அதனால் வரும் நெருக்கடி ஆகியவற்றைப்பற்றியும் உள்ள உண்மைகளையும் அவர்கள் ஸ்தாபித்தார்கள். குட்டி பூர்ஷுவாவும் விவசாயியும் தப்பாது வீழ்ச்சியடைகின்றனர். புரோலிட்டேரியட் வர்க்கம் கேவலநிலை அடைகின்றது. உற்பத்தியில் ஒழுங்கின்மை ஏற்படுகின்றது. செல்வம் பங்கிடப் பட்ட முறையில் பிரம்மாண்டமான வித்தியாசங்கள் உள்ளன. தொழில்முறை சம்பந்தமாகத் தேசங்களிடையே ஒரு வரை ஒருவர் அழிக்கும் போர் மூளுகின்றது. பழைய தர்மீகக் கட்டுப்பாடுகள் குலைகின்றன, பழைய குடும்பத் தொடர்புகளும் பழைய சாதித் தொடர்புகளும்

அறுக்கப்படுகின்றன, என்றெல்லாம் இக்கூட்டத்தி லுள்ள சோஷலிஸ்டுவாதிகள் காட்டியிருக்கிறார்கள்.

ஒன்றில் பழைய உற்பத்திச் சாதனங்களையும் பண்டமாற்றுச் சாதனங்களையும் அவற்றுடன் பழைய சொத்துத் தொடர்புகளையும் பழைய சமுதாயத்தையும் திருப்பி அமைக்கவேண்டும் அல்லது தற்கால உற்பத்திச் சாதனங்களையும் பண்டமாற்றுச் சாதனங்களையும் அச் சாதனங்களால் தவிர்க்கமுடியாது தகர்க்கப்பட்ட பழைய சொத்துத் தொடர்பு முறைக்குள் அடக்கவேண் டும். இவ் இரு வழிகளில் ஒன்றையாதல் இக்கூட்டம் பின்பற்றும் அளவிற்கு அது பிற்போக்குத் தன்மையதா கவும் செய்கை முறையில் சாத்தியமாகாக் கூற்றையுள் ளதாகவும் அது இருக்கிறது.

இக் கூட்டத்தின் இறுதி வார்த்தைகளாவன: "கைத்தொழிலிற்கு ஐக்கிய கில்டுகள் அவசியம். விவ சாயத்திற்குக் குடும்பத் தலைவரின்கீழ் உள்ள தொடர்பு கள் அவசியம்."

கடைசியாக ஒப்புக்கொள்ள வேண்டிய சரித்திர உண்மைகள் தன்னை எமாற்றுவதால் கிடைக்கின்ற ஆவேச மனப்பான்மையைக் குழப்பியபொழுது இத் தகைய சோஷலிஸம் கேவலமான வெறுஅட்டகாச மாகவே முடிந்தது.

(இ) ஜெர்மன் அல்லது 'உண்மையான' சோஷலிஸம்

பிரான்சில் எழுதப்பட்ட சோஷலிஸ கம்யூனிஸ நூல் கள் அதிகாரத்திலிருக்கும் பூர்ஷுவா வர்க்கத்தின் நிர்ப் பந்தத்தின் கீழ் உருவெடுத்தது. இவை அதிகாரத்திற்கு எதிராக நடந்த போராட்டத்தின் பிரதிபிம்பமாகவே

இருந்தன. ஜெர்மனியில் பூர்ஷுவா வர்க்கம் எதேச்சாதி கார நிலப்பிரபுத்வத்திற்கு எதிராகப் போராட்டம் தொ டங்கிய காலத்தில் இது அத்தேசத்தில் புகுந்தது.

ஜெர்மன் தத்வஞானிகளும், தத்வஞானிகளாக வர விரும்பியவர்களும், படிப்பாளிகளும் இந்நூல்களை அவர வுடன் படித்தார்கள். இந்நூல்கள் பிரான்சிலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டுவரப்பட்டபொழுது அவற்றுடன் பிரஞ்ச் சமுதாய நிலைகளும் கொண்டுவரப்படவில்லை என் பதை அவர்கள் உணரவில்லை. ஜெர்மன் சமூகநிலையில் இப் பிரஞ்சு நூல்கள் உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடிய தன்மையை யிழந்தன. ஆகவே வெறும் இலக்கியத்தின் தன்மையையே இவை பெற்றிருந்தன. ஆகையால் பதினெட்டாம் நூற்றாண்டிலுள்ள ஜெர்மன் தத்துவ ஞானிகளுக்கு முதலாவது பிரஞ்சுப் புரட்சியின் கோரிக்கைகள் பொதுவாக நடைமுறையில் நியாயமான தது என்று சொல்லப்படும் கொள்கைக்கு ஏற்ற கோரிக்கைகளாகவே தோன்றின. மேலும் புரட்சிகரமான பிரஞ்ச் பூர்ஷுவாவர்க்கத்தின் விருப்புகளின் ரூபங்கள் அவர்களுக்கு வெறும் விருப்பங்களின் சட்டங்களாக — அதாவது 'விருப்பென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று சொல்லக்கூடிய மனோநிலையின் சட்டங்களாகவும் உண்மையான மனிதவிருப்பு என்றுபொதுவாகச் சொல்லப்படும் மனோநிலைபின் சட்டங்களாகவும் தோன்றின.

புதிய பிரஞ்சுக் கருத்துக்களைத் தங்கள் பூர்வீகத் தத்துவ ஞானத்தால் ஏற்பட்ட மனச்சாட்சியுடன் இசைந்து வரச்செய்வதே ஜெர்மன் படிப்பாளிகளின் வேலையாக இருந்தது. உண்மையில் தங்கள் சொந்தத்

தத்துவஞான நிலையைப் புறக்கணிக்காது பிரஞ்சுக்காரர்களுக்கே இவர்கள் தங்களுடைய தாக்கினர்கள்.

அன்னிய பாஷையின் கருத்து எவ்விதம் மொழி பெயர்ப்பின் மூலம் பயன்படுத்தப்படுகின்றதோ அப்படியே இச் சேர்க்கையும் நடந்தது.

கத்தோலிக்க குருமாரைப்பற்றி யேற்க முடியாத கூறுகைகள் எழுதுவதற்குக் கிறீஸ்துவ சமயத்துக்கு முன்னிய பூர்வீக சமயங்களின் இதிகாசங்களின் கையெழுத்துப் பிரதிகளைக் கத்தோலிக்க குருமார் பாஷித்தார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். சமயத்துக்கு விரோதமானவை யென்று பொதுவாகக் குறிக்கப்பட்ட பிரஞ்ச் நூல்கள் சம்பந்தமாக ஜெர்மன் படிப்பாளிகள் இதே முறையை மாற்றி உபயோகித்தார்கள். அதாவது இப் பிரஞ்சு நூல்களை மேற்கோளாகக் கொண்டு அவற்றிற்கு அர்த்தமற்ற தங்கள் தத்துவக் கருத்துக்களைக் கொடுத்தார்கள். உதாரணமாகப் பணத்தின் பொருளாதார ரீதியான இயல்புகளைப்பற்றிப் பிரஞ்சுக்காரர்கள் செய்த கண்டனத்தின்கீழ் மனிதனிடமிருந்து மானுஷீகத்தைப் பறித்தல் என்று அவர்கள் எழுதினர்கள். மேலும் பூர்ஷுவா அரசாங்கத்தைப்பற்றிப் பிரஞ்சுக்காரர் செய்த கண்டனத்தின்கீழ் "எக்காலங்களிலும் எங்கிலியிலும் உண்மையானதென்று எந்தக் கருத்து வற்கப்பட்டதோ அக்கருத்து நிராகரிக்கப்பட்டது" என்று எழுதினர்கள்.

சரித்திர ரீதியாகப் பிரஞ்சுக்காரர் செய்த கண்டனங்களுக்கு இந்தத் தத்வார்த்த சொற்றொடர்களால் தாமஞ் சூட்டுவதை "செயல் முறைக்கேற்ற ஞானம்" "உண்மை சோஷலிஸம்" "சோஷலிஸத்தைப் பற்றிய

ஜெர்மன் டைடல்ஸ்" "சோஷலிஸத்தின் சத்ரிய ஆல்தெவாரம்" என்று என்னென்னவோ வெல்லாம் சொன்னார்கள்.

பிரஞ்ச் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் நூல்களின் கருத்தக்க வெல்லாம் முற்றுக நசுக்கப்பட்டு வேறுகின. ஜெர்மன் கையில் இச் சோஷலிஸம் வர்க்கப் போராட்டத்தை விளக்கும் கொள்கை ஆகாது விட்டதால் அவர்கள் பிரஞ்சுக் கொள்கையினுடைய குறைகளைத் தாங்கள் நீக்கிவிட்டதாக எண்ணினர்கள். பிரஞ்சுக் கொள்கையில் ஓர் அம்சம் மாத்திரம் பிரதானமாக இருந்ததென்று அவர்கள் கருதினர்கள், இக்குறையைத் தீர்ப்பதனபேரில் அவர்கள் உண்மைத் தேவைகளை வற புறுத்தாது உண்மையின் தேவைகளென்பனவற்றை வற் புறுத்துவதாக எண்ணினர்கள். அதாவது புரோலிட்டேரியட்டின் நலன்களை வற்புறுத்தாது மனித இயல்பின் தேவைகள் என்பனவற்றை வற்புறுத்துவதாக எண்ணினர்கள், இவர்கள் வற்புறுத்தினது உண்மை மனிதனின் தேவைகள் அல்ல, ஓர் வர்க்கத்திற்கும் சேராத உண்மையில் இல்லாத மனிதன் - அதாவது தத்வஞான மென்று கருதப்படும் மனோபாவனையைக் கொண்ட கற்பனை உலகத்தில் மாத்திரமே உள்ள மனிதனின் - நலன்களையே இவர்கள் வற்புறுத்துவதாக எண்ணினர்கள்.

பள்ளிக்கூட மாணவர் படிப்பதுபோலப் படிக்கும் இவ்வேலையை இந்த ஜெர்மன் சோஷலிஸம் திவிரமாகவும் பயபக்தியுடனும் செய்து இக் கலைவைக்குதவாத தனது சரக்கை வெறும் ஆடம்பரத்துடன் உன்னதமாக்கப் பார்த்தது; ஆனால் இதற்கிடையில் வெறும் அறிவுக்காகப் படிக்கப்படும்பொழுது இது பெற்றிருந்த மனதூய்மையைப் படிப்படியாக இழந்தது.

நிலப்பிரபுத்வ மன்னராட்சியுடனும் ஜேர்மன் பூர்ஷுவாவர்க்கமும், பிரதானமாகப் பிரஷ்ய பூர்ஷுவாவர்க்கமும் நடாத்திய போராட்டம் அதாவது மிதவாத இயக்கம் - வரவர உத்வேகமடைந்து வந்தது.

இதனால் 'உண்மையான' சோஷலிஸம் என்பதற்கு நீண்டகாலமாக வேண்டப்பட்டுவந்த சந்தர்ப்பம் கிடைத்தது. கண்முன்னே வளர்ந்த அரசியல் இயக்கத்தின் முன் சோஷலிஸக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க இதனால் முடிந்தது. மிதவாதம், பிரதிநிதித்வ அரசாங்கம், பூர்ஷுவாபோட்டி, எழுத்துச் சுதந்திரத்தைப்பற்றிப் பூர்ஷுவாக்கள் கொண்ட கொள்கை, பூர்ஷுவா சட்டமாக்கும்முறை, பூர்ஷுவா சுதந்திரம், சமத்துவம் ஆகிய எல்லாவற்றிற்கு மெதிராக வழக்கமாகக் கூறப்பட்டுவந்த பிரதிவாதக்கூற்றுக்களைப் பாவிக்கவும், இப் பூர்ஷுவா இயக்கத்தால் பொதுஜனங்கள் பெறுவதற்கு ஒன்றுமில்லை, இதனால் அவர்கள் எல்லாவற்றையும் இழப்பார்கள் எனப் பொதுஜனங்களுக்குப் புத்தி கூறவும் இந்த 'உண்மை' சோஷலிஸத்திற்குச் சந்தர்ப்பம் அழித்தது. பிரஞ்சுக் கண்டனத்தின் மூட எதிரொலியான ஜேர்மன் சோஷலிஸம் தக்க தருணத்தில் ஓர் விஷயத்தை மறந்தது. ஜேர்மனியில் நடக்கப்போகும் போராட்டம் அடையவேண்டியிருந்த நோக்கங்கள், தற்கால பூர்ஷுவா சமூகம் தோன்றுதல், அது நிலைப்பதற்கேற்ற பொருளாதார நிலைமைகள், அவைக்கிணங்கிய அரசியல் திட்டம் ஆகியவை என்பனவையும், இந்நோக்கங்கள் பிரான்சில் ஏற்கனவே சரித்திர உண்மைகளான பின்பே சூறித்த பிரஞ்சுக் கண்டனங்கள் உருவெடுத்தன என்பனவையும் மறந்தது.

குருமார்களும் பண்டிதர்களும் கிராமப் பிரபுக்களும் உத்தியோகத்தர்களும் வால்பிடிக்கும் எதேச்சாதிகார அரசாங்கங்கள் தங்கள் அதிகாரத்தை வீழ்த்த முயற்சிக்கும் பூர்ஷுவா வர்க்கத்தை விரட்டும் வெருள்யாக இந்தச் சோஷலிஸத்தை வரவேற்றன.

ஜேர்மன் தொழிலாளிவர்க்க எழுச்சிகள் இந்நேரத்தில் எற்பட்டபோது இதே அரசாங்கங்கள் அவ்வெழுச்சிகளை அடக்கும் மருந்தாகத் தடியடியையும், துப்பாக்கிக் குண்டுகளையும் பிரயோகித்தார்கள். அக்கசப்புமருந்தின் பின் இந்தச் சோஷலிஸம் ஓர் இனிமையான முடிவாகியது.

இவ் "உண்மையான" சோஷலிஸம் ஜேர்மன் பூர்ஷுவாக்களை எதிர்த்து யுத்தம் செய்வதற்கு, அரசாங்கங்களுக்கு ஓர் ஆயுதமாகியதோடு அதே நேரத்தில் வெறும் மனவிருப்பையே அடிப்படையாகக் கொண்டு அரசியல் ஞானம் பேசி அடக்குமுறையைக் கண்டதும் பயமடைகின்ற ஜேர்மனிய அரசியல்வாதிகளின் நலனின் பிரதிபிம்பமாகவு மிருந்தது. இந்நலன் ஒரு பிற்போக்குத் தன்மை வாய்ந்தே. பதினெரும் நூற்றாண்டிலேயே இருந்து ஜேர்மனியில் மாறுது வந்தும் அக்காலம் தொடக்கம் வெவ்வேறு ரூபங்களில் திரும்பித் திரும்பித் தோன்றியும் வந்த குட்டி பூர்ஷுவாவர்க்கமே ஜேர்மனியில் இப்போதுள்ள நிலைமையைத் தாங்கும் உண்மைச் சமுதாய அஸ்திவாரமாகின்றது.

இவ்வர்க்கத்தைப் பாதுகாப்பதாயிருந்தால் ஜேர்மனியில் இப்போ நிலவும் நிலையையும் பாதுகாக்கவேண்டும். யந்திரசாதனத் தொழில் உற்பத்தியிலும், அரசியலிலும்

பூர்ஷுவாவர்க்கம் அதிகாரம் பெறுவதில் இவ் வர்க்கத் திற்கு இருவழியால் கட்டாய அழிவைத் தேடுகிறது. மூலதனத்தை ஒருசிலரே பெறுவதாலும், புரட்சிகரமான புரோலிட்டேரியட் எழுவதாலும் இம்முடிவு நிச்சயம். "உண்மையான" சோஷலிஸம் இவ்விரண்டபாயத்தையும் ஒரேயடியில் அகற்றுவதாகத் தோன்றியது. ஆகவே காட்டுத்தீபோல் பரவியது.

ஜெர்மனிய சோஷலிஸ்டுகளின் "நித்ய உண்மைகள்" என்று சொல்லப்படும் பரிதபிக்கத்தக்க இயக்கும்சக்தி யற்ற கொள்கைகள், கற்பனை எனப்படும் சிலந்தி நூல்க ளால் செய்யப்பட்ட ஓர் போர்வையால் மூடப்பட் டிருக்கின்றன. பாஷா அலங்காரமென்னும் பூக்கள் மனத்தை வெறுக்கச் செய்யும் வெற்றுணர்ச்சியென் னும் பனிநீரில் தோய்க்கப்பட்டு இப்போர்வையை அழகு படுத்துகின்றன. ரூபத்தை உன்னதப்படுத்தும் இவ் ஆடையே எலும்பும் தோலுமான கொள்கைகளை இத் தகைய பொதுஜனங்களிடையே அதிசயிக்கத்தக்க வித மாகப் பரப்புவதற்கு எதுவாகின்றது.

வெறும் மனவிருப்பையும் பயத்தையும் அடிப் படையாகக் கொண்டுள்ள குட்டி பூர்ஷுவா அரசியல் வாதியின் சொற்பிரயோகம் செய்யும் பிரதிநிதியாகவிருப் பதே தனது தொழிலென ஜெர்மன் சோஷலிஸம் வர வரத் தானுகவே ஒப்புக்கொள்கின்றது.

அது ஜெர்மன் ஜாதியே முன்மாதிரியான ஜாதி யென்றும் மேற்குறித்த ஜெர்மன் குட்டி பூர்ஷுவாவே சரியான மனிதனென்றும் அது பகிரங்கமாகக் கூறியது. இம்மாதிரி மனிதனிலுள்ள ஒவ்வொரு மோசமான ஈன மான குணமும் அதனது உண்மைக் கருத்திற்கு நேர் மாறுக மறைமுகமான உன்னதமான சோஷலிஸத் தன்

மையைப் பெற்றிருக்கிறதென அது விமர்சனம் செய்தது. மேலும் கம்யூனிஸத்தின் 'மிருகத்தனமாக அழிக்கும்' போக்கை நேராகத் தான் எதிர்ப்பதாகவும் எல்லா வர்க்கப் போராட்டங்களையும் தான் வித்தியாசமில்லாது முற்றுக வெறுப்பதாகவும் கூறும் கடைசிக்கட்டத்தையும் அடைந்து விட்டது. சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் பிரசுரங்கள் என்று சொல்லப்பட்டு இப்போது (1848) ஜெர்மனியில் பரவியிருக்கும் பிரசுரங்களெல்லாம் ஓர் சிலவற்றைவிட இந்த மோசமான மனத்தைக் கிளர்க்கும் நூல்களின் கூட்டத்தையே சேர்ந்தன.

---

2. கன்ஸர்வேட்டிவ் அல்லது பூர்ஷ்வா சோஷலிஸம்.

பூர்ஷ்வா சமூகம் எப்பொழுதுமே நிலைத்திருப்பதை உறுதியாக்குவதற்கு பூர்ஷ்வா வர்க்கத்தின் ஓர் பகுதியினர் சமூகக் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய விரும்புகிறார்கள்.

பொருளாதார நிபுணர், பரோபகாரிகள், தயாதாக்ஷண்யர்கள், தொழிலாளி வர்க்கத்தினுடைய நிலைகளைச் சீர்திருத்துவோர், தர்மகாரியங்களை ஒழுங்குசெய்வோர், மிருகங்களுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சங்கங்களின் அங்கத்தவர்கள்; மதுவிலக்குப் பிரேமிகள், மூலைமுடுக்குகளில் சீர் திருத்தம் செய்ய விரும்புவோர் ஆகியவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள். மேலும் இவ்வித சோஷலிஸம் பூரணமாக அமைக்கப்பட்ட திட்டங்களாகவும் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இம்முறையின் உதாரணமாக பிறௌடோன்

Proudhon) எழுதிய "வறுமையின் தத்துவ சாஸ்திரம்" என்னும் நூலை நாங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

தற்கால நிலைகளிலிருந்து இன்றியமையாது கிளம்புகின்ற போராட்டங்களேயும் தவிர்த்து, அந்நிலைகளிலிருந்தும் எழுகின்ற நன்மைகள் எல்லாவற்றையும் சோஷலிஸ்ட் பூர்ஷுவாக்கள் விரும்புகின்றார்கள். தற்போது நிலவும் சமூக நிலையைக் குலைத்துப் புரட்சிகரமாக மாற்றக் கூடிய அம்சங்களைத் தவிர்த்து அம்முறை மாத்திரம் நிலைக்க வேண்டுமென விரும்புகிறார்கள், புரோலிட்டேரியட் வர்க்கமில்லாத பூர்ஷுவா வர்க்கமே யிருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். தான் ஆதிக்கம் செலுத்தும் உலகமே எல்லாவற்றிலும் சிறந்ததென இயற்கையாகவே பூர்ஷுவா வர்க்கம் எண்ணுவது இயல்பே. மனதைச் சாந்தி பண்ணும் எண்ணத்தை அநேகவிதமான சித்தாந்தங்களாகப் பூர்ஷுவா சோஷலிஸம் வளர்த்திருக்கிறது. இவ்விதச் சித்தாந்தத்தைப் புரோலிட்டேரியட் நடைமுறைக்குக் கொண்டுவந்து புதிய மோசஷசமுதாயத்துக்குப் புரோலிட்டேரியட் செல்லவேண்டுமெனப் பூர்ஷுவா வர்க்கம் விரும்பும்போது உண்மையில் பின்வருவதையே விரும்புகிறது. தற்போதைய சமுதாயத்தின் எல்லைகளுக்குள் புரோலிட்டேரியட் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் பூர்ஷுவா வர்க்கத்தைப்பற்றித் தான் கொண்டிருக்கும் துவேஷ எண்ணங்கள் எல்லாவற்றையும் புரோலிட்டேரியட் களைய வேண்டும்.

இன்னோர் முறையாக இப் பூர்ஷுவா சோஷலிஸம் உருவெடுத்திருக்கிறது. இவ்விரண்டாவது முறை மேற்குறித்ததைப்போல் ஓர் சித்தாந்தமாக அமைக்கப்படாவிட்டாலும் அதிலும் பார்க்கக்கூடிய அளவிற்கு அது

பவ சாத்தியமாகிறது. இதன் தன்மையாவது: அரசியல் திருத்தத்தால் மாத்திரம் புரோலிட்டேரியட்டுகளுக்கு நன்மை வராது எனக் காட்டுதல், பொருளாதார சம்பந்தங்களிலும் வாழ்க்கைக்கு எதுவான பொருள் வசதிகளிலும் மாற்றம் ஏற்படுவதால் மாத்திரமே புரோலிட்டேரியட் வர்க்கத்திற்கு நன்மை கிடைக்குமெனக் கூறுதல், இவ்விதம் கூறி ஒவ்வொரு புரட்சி இயக்கத்தையும் தொழிலாளிவர்க்கத்தின் கண்ணோட்டத்தில் இழிவு படுத்தல் ஆகியவையே. வாழ்க்கைக்கேதுவான பொருள்வசதிகளில மாற்றம் வேண்டுமென இவ்வித சோஷலிஸம் கூறும்போது என்னத்தைக் கருதுகிறது? தொழில் உற்பத்தியிற் பூர்ஷுவாக்களேற்படுத்தியிருக்கும் தொடர்புகளே நிலைத்திருக்கும் அஸ்திவாரமாக வைத்து அவ்வடிப்படையில கிர்வாக மாற்றங்களேயேற்படுத்தல் என்பதையே இது கருதுகிறது. ஆகையால் இம்மாற்றம் முதலுக்கும் தொழிலிற்குமிடையேயுள்ள தொடர்புகளே ஓர்விதமாகவேனும் பாதியாது பூர்ஷுவா அரசாங்கத்தின் கிர்வாக வேலையைச் சுலபமாக்கவும், செலவைக் குறைக்கவும் எதுவாகின்றன.

வெறும் சொற்சித்திரமாகவரும்பொழுதே பூர்ஷுவா சோஷலிஸம் போதிய விளக்கமுள்ள நிலையையடைகிறது.

பூர்ஷுவா சோஷலிஸம் திர்க்கமாகவும் இறுதியாகவும் சொல்வது யாது? தங்குதடையற்ற வியாபாரம், தொழிலாளிவர்க்கத்தின் நலனுக்காகவே இருக்கிறதென்பதும், தொழில்களைப் பாதுகாக்கும் தீர்வை வரிகள் தொழிலாளி வர்க்கத்தின் நன்மைக்காகவே யிருக்கின்றன வென்பதும், சிறைப்படுத்தும் முறையில் சீர்திருத்தம் செய்வதும் தொழிலாளி வர்க்கத்தின் நன்மைக்காக வென்பதுமே.

இதைச் சுருங்கக் கூறினால் பூர்ஷுவா பூர்ஷுவா வாக இருப்பது தொழிலாளி வர்க்கத்தின் நன்மைக் காகவே எனச் சொல்லலாம்.

---

3. "கிரிட்டிக்கல் - யுதோப்பியன்" சோஷலிஸமும் கம்யூனிஸமும்.

தற்காலத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு பெரும் புரட்சி யிலும் புரோலிட்டேரியட் வர்க்கத்தின் கோரிக்கைகளை வற்புறுத்திய நூல்களை "பபூவ்" (Babuef) முதலியோர் களின் நூல்களை நாங்கள் இங்கே குறிக்கவில்லை.

தனது சொந்த நோக்கங்களை அடைவதற்காகப் புரோலிட்டேரியட் தானுகவே எடுத்த முதல் முயற்சி கள் நிலப்பிரபுத்வ சமுதாயம் வீழ்த்தப்படும்போதும் எகுரும் உணர்ச்சி ஆவேசம் ஏற்பட்டிருந்த காலத்திலும் எடுக்கப்பட்டன. இவை அக்காலத்திலே சித்தியடையா தது தவிர்க்க முடியாத ஓர் விஷயமே. அக்காலத்தில் புரோலிட்டேரியட் வளர்ச்சியடையாத நிலையில் இருந்த தாலும். புரோலிட்டேரியட்டின் விமோசனத்திற்கு ஏற்ற இந்தப் பொருளாதார நிலைமைகள் இல்லாதிருந்ததாலும் இம்முயற்சிகள் சித்தியடையவில்லை. புரோலிட்டேரியட் டின் விமோசனத்திற்கேற்ற இந்தப் பொருளாதார நிலை கள் அடுத்து வந்த பூர்ஷுவா சகாப்தத்தில் மாத்திரமே யேற்படுத்தக்கூடியனவாயிருந்தன. புரோலிட்டேரியட் டின் முதல் முயற்சிகளான இவ்வியக்கங்களுடன் சேர்ந்து எழுந்த புரட்சிகரமான நூலகள் தவிர்க்க முடி யாது ஓர் பிற்போக்குத்தன்மையைப் பெற்றிருந்தன. எங்கும் எழிய வாழ்க்கை நிலவவேண்டும். சமூக ஏற் றத் தாழ்வுகளை மட்டுப்படுத்தவேண்டும் என்ற கொள்கை களே மிகவும் கேவலமான முறையில் இந்நூல்கள் பரப் பின.

சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் முறைகளெனச் சரியாகச் சொல்லக்கூடியவை - செயின்ற் சைமன் (Saint-Saimon) போரியர் (Fourier) ஓவன் (Owen) முதலியோர்களின் முறைகள்-புரோலிட்டேரியட் வர்க்கத்துக்கும் பூர்ஷுவா வர்க்கத்துக்குமிடையே நடக்கும் போராட்டத்தின் தொடக்க வளர்ச்சி குறைந்த காலமென மேலே விவரிக்கப்பட்ட காலத்திலேயே உருவெடுத்தன. ("பூர்ஷுவாக்களும் புரோலிட்டேரியட்டுகளும்" என்ற தலையங்கமுள்ள முற்பகுதியைப் பார்க்க.)

தற்போது நிலவும் சமுதாய முறையில் எற்படும் வர்க்க விரோதங்களையும் அம்முறையைக் குலைக்கும் சக்திகளின் வேலைகளையும். இந்த சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் முறைகளைக் கண்டுபிடித்தவர்கள் உண்மையில் கண்டார்கள். ஆனால் அவர்களின் கண்ணோட்டத்திற்கு இன்னமும் குழந்தைப் பருவத்திலிருந்த புரோலிட்டேரியட் வர்க்கம் சரித்திரத்தின் நிர்ணயிக்கக்கூடிய தன் முயற்சியையோ, தனித்து அரசியலில் இயங்கக்கூடிய தன்மையையோ பெற்றதாகத் தோன்றவில்லை

வர்க்க விரோதத்தின் வளர்ச்சி யந்திரசாதன முறையின் வளர்ச்சியோடு சமவேகத்தோடு ஏற்படுவதால் அவர்கள் கண்ட பொருளாதார நிலை புரோலிட்டேரியட் வர்க்கத்தின் விமோசனத்திற்கு ஏதுவான பொருள் வசதிகளை யுடையதாக அவர்களுக்குத் தோன்றவில்லை. ஆகையால் இந்தப் பொருள் வசதிகளை சிருஷ்டிக்கக்கூடிய புதிய சமூகக்கோட்பாடுகளையும் ஓர் புதியசமூக விஞ்ஞானத்தையும் அவர்கள் தேடுகிறார்கள்.

சரித்திரத்திலேற்படும் செய்கைக்குப் பதிலாகத் தனிப்பட்டவர் கற்பனையால் ஏற்படும் முயற்சியை அவர்கள் அவசியமெனக் கருதுகிறார்கள். "சரித்திரவளர்ச்சியின் போது சிருஷ்டிக்கப்பட்ட விமோசனநிலைக்குப் பதி

லாகக் கற்பனையாலேற்படும் நிலைகளையே அவர்கள் அவசியமெனக் கருதுகிறார்கள்" படிப்படியாகத் தாங்களே புரோலிட்டேரியட் வர்க்கம் அமைவதற்குப் பதிலாக இந்தக் கற்பனை சிருஷ்டிக்காரரால் வேண்டும் என்று அமைக்கப்பட்ட ஓர் சமுதாய அமைப்பை ஏற்றது எனக் கருதுகிறார்கள். இவர்களுடைய கண்ணோட்டத்தில், எதிர்காலச் சரித்திரம் இவர்களுடைய சமூகத் திட்டங்களைப் பரப்பும் பிரசாரமாகவும், அவைகளை நடைமுறையில் கொண்டுவரும் வேலையாகவும், மாறுகிறது.

தங்களுடைய திட்டங்களை உருவாக்கும்போது ஓர் விஷயத்தை அவர்கள் உணருகிறார்கள். தொழிலாளிவர்க்கம் எல்லாவற்றிலும்பார்க்கக் கூடக் கஷ்டப்படும் வர்க்கமாதலை அவ்வர்க்கத்தின் நலன்களை விசேஷமாகக் கவனிக்கிறோம் என அவர்கள் உணருகிறார்கள். மிகவும் மோசமாகக் கஷ்டப்படும் வர்க்கமென்ற தோரணையிலே புரோலிட்டேரியட் வர்க்கம் அவர்களுக்குத் தோன்றுகிறது.

வர்க்கப்போராட்டத்தின் வளர்ச்சி குறைந்த நிலையும், அவர்களுடைய சுழ்நிலையும், இவ்வித சோஷலிஸ்டுக்களுக்கு ஓர் எண்ணத்தைக் கொடுக்கின்றன. "வர்க்க விரோதக்கள் எல்லாவற்றிற்கும் தாங்கள் எவ்வளவோ மேலானவர்கள் எனத் தங்களைத் தாங்கள் கருதுகிறார்கள். ஏற்கனவே கூடிய சலுகைகள் பெற்றவர்கள் உட்பட சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தவருடைய நிலையை மூனேற்ற அவர்கள் விரும்புகிறார்கள். ஆகையால் வர்க்கவித்தியாசமில்லாது பொதுவாகச் சமூகம் முழுவதற்கும் அவர்கள் விடாது விண்ணப்பஞ் செய்கிறார்கள். தங்களுடைய திட்டத்தை விளங்கியதின் பின்பு சமுதாயத்தைக் கூடியளவு திறமான முறையில் வைப்பதற்குக் கூடியளவு திறமான திட்டம் இதுதான் என்பதை எவ்

விதம் மனிதர் காணுமலிருக்க முடியுமென அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆகவே அரசியல் செய்கை எல்லாவற்றையும் விசேஷமாக, புரட்சிகரமான செய்கை எல்லாவற்றையும் அவர்கள் நிராகரிக்கிறார்கள்; தங்கள் நோக்கங்களைச் சமாதான முறைகளில் அடைய எத்தனிக்கிறார்கள்; சித்தியடையாது கட்டாயமாக முடிய வேண்டிய சிறு சோதனைவேலைகளின் மூலமும், முன்மாதிரி காட்டுவதால் எற்படும் செல்வாக்கின்மூலமும், தங்கள் புதிய சமுதாய சித்தாந்தத்தையடைய எத்தனிக்கிறார்கள்.

வளர்ச்சியடையாத நிலையிலிருந்து தனது நிலையைப் பற்றிப் புரோலிட்டேரியட் கற்பனையான ஓர் எண்ணத்தைக் கொண்டிருக்கும் காலத்தில் எதிர்கால சமுதாயத்தைப் பற்றி வரையப்பட்ட இந்தக் கற்பனைப் படங்கள், சமுதாயத்தை முற்றுகமாற்றி அமைப்பதற்கு இவ்வர்க்கம் முதல்முதலாக இயல்பாகவே கொண்ட விருப்பங்களுக்கு எற்றனவாயிருக்கின்றன.

ஆனல் இச் சோஷலிஸ கம்யூனிசப் பிரசுரங்கள் கண்டனம் செய்யும் ஓர் தன்மையையும் கொண்டுள்ளன. நிலவுகின்ற சமூகத்தின் ஒவ்வோர் கோட்பாட்டையும் இவை தாக்குகின்றன. ஆகையால் தொழிலாளி வர்க்கத்தின் அறிவு வளர்ச்சிக்கேற்ப மிகவும் அருமையான உண்மைகள் இவைகளில் நிறைந்திருக்கின்றன. நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்குமுள்ள வித்தியாசம், குடும்பம், தனிப்பட்டவர்களுக்காகத் தொழில்களை நடத்தும் முறை, சம்பளமுறை, ஆகியவற்றை அழித்தல், சமுதாயத்தில் முரண்பாடற்ற நிலையை எறபடுத்தல், அரசாங்கத்தின் வேலைகளைத் தொழில் உற்பத்தியை மேற்பார்வையிடுதலாக மாத்திரம் மாற்றல் - இவ்விதம் செய்கை

முறைகளை அவர்களின் பிரசுரங்களிற் காணலாம். இந்த நோக்கங்களெல்லாம் அந்தக் காலத்தில் முனைத்து, தெளிவாகத் தொடக்கவுருபத்தில் மாத்திரம் இப் பிரசுரங்களில் கணிக்கப்பெற்றவர்க்க விரோதங்கள் அழிவடையும் நிலையையே குறிக்கின்றன. ஆகையால் இவைகள் நடைமுறைக்கு வரமுடியாத எட்டுச்சுரைக்காய்த் தன்மையையுடையன.

சரித்திரவளர்ச்சி எவ்வளவுக்கு அதிகரிக்கிறதோ அவ்வளவுக்கு இந்த 'கிரிட்டிக்கல் - யூதோப்பியன்' (அதாவது கண்டனம் செய்யும் தன்மையுடையதும் எட்டுச் சுரைக்காய்த் தன்மையும்பெற்ற) சோஷலிஸமும் கம்யூனிஸமும் கருத்துப் பெருமையை இழக்கின்றது. தற்கால வர்க்கப்போராட்டம் வளர்ந்து தெளிவான ரூபம் எடுத்துக் கொண்டு போகப்போகப் போட்டியினின்று விலகிநிற்கும் கற்பனைக் கொள்கையும் அப்போட்டியைத் தாக்கும் இக் கற்பனைக் கண்டனங்களும் அனுபவசாத்தியம் சற்றுமே இல்லாமல் தத்வரீதியிலும்கூட அவசியமில்லாமற் போகின்றன. ஆகையால் இந்தச் சித்தாந்தங்களைத் தொடங்கியவர்கள் அனேகமாகப் புரட்சிகரத் தன்மையைப் பெற்றிருந்தபோதிலும் அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் எங்கும் பெரும் பிற்போக்குத் தன்மையான குழுக்களாயிருக்கின்றனர். ஆகவே இடைவிடாது வர்க்கப் போராட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் வர்க்கவிரோதங்களைச் சமாளித்து ஒற்றுமைப்படுத்தவும் முயற்சிக்கிறார்கள். தங்களுடைய எட்டுச் சுரைக்காய்த் தன்மையதான சமூகத்திட்டங்களைச் சோதனை செய்து அடையவும் தனியிடங்களில் சிருஷ்டிக்கவும் சோஷலிஸ்ட்காலனிகளை (ஓவனுடைய ஹோம் காலனி பேரியடைய பெலாண்ஸ்டெரஸ், கபெற்றுடைய விட்டில் இக்கேரியா போன்ற காலனிகளை) - அதாவது புதிய மோசஷ உலகத்தின் சிறிய காப்பிகளையும் – அமைக்கவும் கனவு கான்

கின்றார்கள். இந்த மனக்கோட்டைகளை எல்லாம் அடைவதற்குப் பூர்ஷுவாக்களின் தர்ம உணர்ச்சிகள், பொருள் உதவி ஆகியவற்றை உபயோகிக்கும் நோக்க மாக விண்ணப்பம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். படிப்படியாக மேலே விளக்கப்பட்ட பிற்போக்கான பழமைவாத சோஷலிஸ்டுகளின் கூட்டத்தில் போய்ச் சேருகிறார்கள். ஒரு விஷயத்தில் மாத்திரம் இவ்விரு சாராருக்கும் இடையே வித்தியாசம் உண்டு. பிற்திய வர்களிலும் பார்க்கக் கூடிய ஒழுங்குள்ள வெறும் பாண்டித்தியத்தைக் காட்டுவதிலும் தங்களது சமூக விஞ் ஞானம் இந்திர ஜால பலனைக் கொடுக்கும் என்ற பிடி வாதமான மூட நம்பிக்கையைக் காட்டுவதிலுமே இவர் கள் பிற்திய கூட்டத்தாரிலிருந்து வேறுபடுகிறார்கள்.

ஆகவே தொழிலாளி வர்க்கம் நடாத்துகின்ற எல் லா அரசியல் செய்கையையும் அவர்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள். இவர்களின் கோட்பாட்டின்படி புரட் சித்தாந்தத்தை நம்பாது குருட்டுத் தன்மையிலிருந்தே இவ்வித அரசியல் செய்கை ஏற்படக்கூடும்.

இங்கிலாந்தில் ஓவனைப் பின்பற்றுபவர்களும் பிரான் சில் போரியரைப் பின்பற்றுபவர்களும் முறையே சாட்டிஸ்டுகளையும்(Chartists) றிபோமிஸ்ட் (Refomists) என்பவர்களையும் எதிர்க்கிறார்கள்.

IV

தற்போதுள்ள சகல எதிர்க்கட்சிகள் சம்பந்தமாக கம்யூனிஸ்டுகள் எடுக்கும் நிலை.

தற்போதுள்ள தொழிலாளிவர்க்கக் கட்சிகளுடன், அதாவது இங்கிலாந்தில் சாட்டிஸ்டுகள், அமெரிக்காவில்

விவசாய சீர்திருத்தக் காரருடன், கம்யூனிஸ்ட்டுகள் கொண்டுள்ள தொடர்புகளை மேலேயுள்ள இரண்டாம் பகுதி விளக்கியிருக்கிறது.

தொழிலாளிவர்க்கத்தின் உடன் நோக்கங்களை அடைவதற்கும் அவ் வர்க்கத்தின் தற்போதைய கலன்களை வற் புறுத்தவும் கம்யூனிஸ்டுகள் போராடுகின்றார்கள்; ஆனால் இன்றைய இயக்கத்திலுள்ளிருந்து அவ் இயக்கத்தின் எதிர்காலத்தைப் பாதுகாத்து இவ் இயக்கத்தின் எதிர் காலப் பிரதிநிதியாகவும் இருக்கிறார்கள். பிரான்சில் பழமைவாத, புதுமைவாத, பூர்ஷுவாக்களுக்கு எதிராக சோஷல் டிமோக்கிராட்டுகளுடன் (Social Democrats) சேர்கிறார்கள். ஆனல் பெரிய புரட்சியிலிருந்து பரம்பரையாக ஏற்கப்பட்டுவந்த சொற்றொடர்களையும் தத்வப் பிரேமைகளையும் தாங்கள் பரிசீலனை செய்யக்கூடிய நிலையைக் கொடுக்கும் உரிமையை அவர்கள் விட்டுக் கொடுக்கவில்லை.

சுவிட்சலாந்தில் ரடிக்கல்ஸ் என்று சொல்லப்படும் புதுமை வாதிகளை அவர்கள் ஆதரிக்கிறார்கள்; ஆனல் இந்தக் கட்சியினுள் ஒன்றுக்கொன்று விரோதமான சக்திகள் இருக்கின்றனவென்றும் இந்தக் கட்சியில் ஒருபகுதி பிரான்சிலேயுள்ளவர்களைப்போன்ற ஜனநாயக சோஷலிஸ்டுகளாகவும் இன்னேர்பகுதி புதுமைவாத பூர்ஷுவாக்களாகவும் இருக்கின்றனர் என்பதை மறக்கவில்லை.

போலந்தில் தேசிய விடுதலைக்கு விவசாயப் புரட்சி முதற்றேவை என்பதை வற்புறுத்தும் கட்சியை, அதாவது 1846-ல் 'கிராக்கெவ' என்ற இடத்தில் புரட்சி உண்டாக்கிய கட்சியை - அவர்கள் ஆதரிக்கிறார்கள்.

ஜர்மனியில் எதேச்சாதிகார முடியாட்சி, நிலப் பிரபுத்வ வர்க்க ஆட்சி ஆகியவற்றிற்கு எதிராகப் பூர்ஷுவா வர்க்கம் புரட்சிகரமான முறையில் போராடும்போது

வர்களுடனும் மற்றும் குட்டி பூர்ஷுவாக்களுடனும் அவர்கள் சேர்ந்து போராடுகிறார்கள்.

ஆனால் அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்குக் கூடிய அளவு தெளிவாக விளங்கக்கூடிய விதமாக ஓர் உண்மையைப் பரப்பாது ஓர் நிமிஷமும் அவர்கள் விட மாட்டார்கள். பூர்ஷுவா வர்க்கத்திற்கும் புரோலிட்டேரியட்டிற்கு மிடையே எதிர்த்தன்மைபான விரோதம் இருக்கின்றதென்பதைத் தொழிலாளி வர்க்கம் உணரும் படி செய்தார்கள். தனது ஆதிக்கத்துடன் சேர்த்து பூர்ஷுவா வர்க்கம் சிருஷ்டிக்கும் சமூகப் பொருளாதார நிலைகளைப் பூர்ஷுவா வர்க்கத்திற்கு எதிராக ஜெர்மன் தொழிலாளிகள் பாவிக்கவும் ஜெர்மனியின் பிற்போக்கு வர்க்கங்கள் எல்லாம் வீழ்ந்தபின் பூர்ஷுவா வர்க்கத்திற் கே எதிராக நடக்கும் போராட்டம் உடனே தொடங் கவும் இவர்கள் இவ்விதம் செய்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்டுகள் பிரதானமாக ஜெர்மனிமீது தங் கள் கருத்தைச் செலுத்துவதற்குக் காரணம் உண்டு. இந்தத்தேசம் பூர்ஷுவாப்புரட்சிதொடங்கும் தருவாயி லிருக்கிறது. இப்புரட்சி 17-ம் நூற்றாண்டில் இங்கிலாந் தில் நடந்த புரட்சியிலிருந்தும் 18-ம் நூற்றாண்டில் பிரான்ஸ்சில் நடந்த புரட்சியிலிருந்தும் வேறுபடுகிறது. எனெனில் இப்புரட்சி ஐரோப்பியநாகரீகத்தின் வளர்ச்சி பெற்ற சூழ்நிலையில் நடக்கப்போகின்றது. முந்திய புரட் சிக்காலங்களில் இங்கிலாந்தில், பிரான்ஸ்சிலிருந்த புரோ லிட்டேரியட்டிலும் பார்க்க எவ்வளவோ கூடியவளர்ச்சி பெற்றவர்க்கம் இருக்கும்நிலையில் இப்புரட்சி நடக்கப் போகிறது; மேலும் ஜெர்மனியில் நடக்கப்போகும் பூர் ஷுவாப் புரட்சி உடனே தொடர்ந்து நடக்கவேண்டிய புரோலிட்டேரியட் புரட்சியின் வழிகாட்டியாகவே இருக்கிறது.

சுருங்கக் கூறின் தற்போது நிலவுகின்ற சமூக அரசியல் முறைகளுக்கு எதிராக எங்கெங்கு எவ்வெப் புரட்சி நடக்கின்றதோ அப்புரட்சி ஒவ்வொன்றையும் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கின்றார்கள்.

இந்த இயக்கங்கள் எல்லாவற்றினும் ஓர் பிரச்சினையை முதற் பிரச்சினையாக, அவர்கள் கொண்டு வருகின்றார்கள். குறித்த காலத்தில் எவ் வளர்ச்சியைச் சொத்துப் பிரச்சினை அடைந்திருந்தாலும் இப் பிரச்சினையையே அவர்கள் முதன்மையாகக் கொண்டுவருகிறார்கள்.

இறுதியாக, எல்லாத் தேசங்களிலும் உள்ள ஜனநாயகக் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி ஒன்று படுத்த அவாகள் எங்கும் சளையாது உழைக்கிறார்கள்.

தங்களது கொள்கைகளையும் நோக்கங்களையும் மறைப்பதைக் கம்யூனிஸ்டுகள் வெறுக்கிறார்கள். நிலவுகின்ற சமூகநிலைகள் எல்லாவற்றையும் பலாத்காரமாக வீழ்த்துவதின் மூலமே தங்களது நோக்கங்களை அடையலாமென அவர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்துகிறார்கள். கம்யூனிஸ்ட் புரட்சியை கிளைத்து ஆளும் வர்க்கங்கள் நடுங்கட்டும். புரோலிட்டேரியட்டுக்கள் தங்களது தழைகளை விட இழப்பதற்கு ஒன்றையும் வைத்திருக்கவில்லை. அவர்கள் வெற்றிபெற்று அடைவதற்கு உலகம் முழுவதுமே இருக்கிறது.

எல்லாத் தேசத்துத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

நன்றி

S. Thanthirayah,
B2, VHN - EAST,
Jaffna.

சோவியத்
கம்யூனிஸ்ட்கட்சி சரித்திரம்

600 பக்கங்கள். விலை ரூபா 6-00

மார்க்ஸிஸம், லெனினிஸத்தில் போதிய விஷய ஞானத்தை விரும்புகிறவர்களுக்கு இப் புத்தகம் வாய்ப் பிரசாதமாகும்.

தொழிற்சங்கம் — கார்ல்மார்க்ஸ்

விலை ரூபா 2-50

தொழிற்சங்கத்தின் லட்சியங்கள், பொருளாதாரப் போராட்டத்திற்கும் அரசியல் போராட்டத்திற்குமுள்ள சம்பந்தம், தொழிற் சங்கங்களை எப்படி வளர்த்தல் ஆகிய வைகள் இதில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கூலியுழைப்பும் மூலதனமும் — கார்ல்மார்க்ஸ் விலை சதம் 50

நாட்டில் நடக்கும் வர்க்கப் போராட்டங்களுக்கும் தேசியப்போராட்டங்கட்கும் யதார்த்த அஸ்திவார மாக அமைந்துள்ள பொருளாதார உறவுகளை இதில் மார்க்ஸ் தெளிவாக விளக்குகிறார்.

இன்றைய இந்தியா - 2பாகங்கள் விலை ரூ.7.

(ராஜினி பாமிதத் எழுதியது)

ஏராளமான மூலச் செல்வங்களையுடைய இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின்கீழால் எழ்மையடைந்ததன்ரகசியத்தையும், அதன் விவசாயம் கைத்தொழில் சீழிந்ததையும் படம் பிடித்துக் காட்டுகிறது. விவசாயப் புரட்சியின் அவசியத்தையும் தொழில்கள் தேசியமயமாக்கப்படுவதன் அவசியத்தையும் உணர்த்தும் நூல்.

லிதாவிலாஸ புத்தகசாலை,

15ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.